விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 03 | செவ்வாய்க்கிழமை | (19.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 305

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## சமாதான முயற்சிகள் குறித்த

# ஐரோப்பிய ஒன்றிய நடவடிக்கைகளுக்கு

# விடுதலைப் புலிகள் ஒத்துழைக்கவேண்டும்



## ஒன்றிய அதிகாரிகள் வேண்டுகோள்

(பிரேசல்ஸ்)

**ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகார குழுவினர் பெல்ஜிய அரசினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் வெளிவிவகாரப்பிரிவு அதிகாரிகளைத் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.**

இலங்கை அரசும், ஜனாதிபதியும் சமாதான முயற்சிகள் குறித்து சர்வதேச ரீதியில் செய்துவரும் பொய்ப் பிரசாரங்களை முறியடிப்பதற்கு எதிர்ப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் நேற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பெல்ஜிய அரசின் பிரதிப் பணிப்பாளர் கிறிஸ்ரியன் மொனோயர் மற்றும் பெல்ஜிய அரசின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான தலைவருடனும் விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவின் உயர்வைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி, அரசுக்கு எதிராக இன்று ஆறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளது.

வாழ்க்கைச் செலவு உயர்வு உட்பட அரசின் செயற்பாடுகளைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளது. கொழும்பிலுள்ள கொள்ளுப்பிட்டி, நவலோக சந்தி, பாலியகொட தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தி, மருதானை, கொச்சிக்கடை, ஹெபார்க் ஆகிய இடங்களிலேயே இந்தப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.(ச-8)

## மினிவான் - மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் பரிதாப மரணம்

### புங்கங்குளத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மினிவானும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகினார்.

இச்சம்பவம் நேற்றுமாலை 2 மணிக்கு அரியாலை புங்கங்குளம் சந்தியில் நடைபெற்றது.

முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த வான் ஒன்றைக் கடந்துசெல்ல முற்பட்டவேளை எதிரே வந்த வானுடன் மோதியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு மரணமானார். இவர் இச்சம்பவம் நடைபெற்று அரை மணிநேரம் தாமதித்தே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் கொலை வழக்கு மீண்டும் விசாரணைஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் எட்டுப்பேர் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகளை மீண்டும் ஆரம்பிக்கவிருப்பதாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற எட்டுப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. இருதயபுரத்தில் ஒருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் பிரதேசத்தில் நேற்றுக்காலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பாக்கியநாதன் (வயது 24) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இக்கொலைச் சம்பவம் பற்றி மட்டக்களப்பு மாவட்டப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமர திவாகர கருத்துத் தெரிவிக்கையில்,

இக்கொலைச் சம்பவத்திற்கு சிறியரக கைத்துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டது. அத்துடன், உயிரிழந்தவரின் மார்பிலும் தலையின் பின்புறத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. மேலும் கொல்லப்பட்டவரின் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு பூட்டுப்போடப்பட்ட நிலையில் காணப்பட்டதெனக் கூறினார்.(க-61)

## பஸ்நிலையம் முன்பாக இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலைச் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்நிறுத்தி உரிய தண்டனையை வழங்கவேண்டும் எனக்கோரி இன்று யாழ். பஸ்நிலையம் முன்பாக எதிர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பின் ஏற்பாட்டில் இன்று நண்பகல் 12 மணியளவில் இருந்து ஒரு மணிநேரம்வரை இப்போராட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும், படுகொலைகளும் மீண்டும் பெருமளவில் அதிகரித்துவருகின்றது. கிழக்கில் ஊடகவியலாளர் ஐயாத்துரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸாரை நியமிப்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இங்கு வந்திருந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய உயர் அதிகாரிகள் குழு விரைவில் இலங்கை வரவுள்ளது!

(கொழும்பு)

இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் ஐவர் அடங்கிய குழுவொன்று இலங்கை வரவுள்ளது. இந்தியாவில் இருந்து இலங்கை, ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது குறித்த பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்வதற்காகவே அக்குழு இலங்கைக்கு வரவுள்ளது.

இந்திய அதிகாரிகள் குழு இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் செயலா[illegible], சிறில் ஹேரத் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் உட்பட பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்ப[illegible] அடுத்த இரு மாதங்களுக்குள் பூர்த்தி[illegible]

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை

"நமது கையில் என்ன இருக்கிறது? எல்லாம் அவன் செயல்" என்று சொல்லிக்கொண்டே காலம் தள்ளுவார்கள். சிலர் "இதோ பாருங்கள் நீங்கள் யாரையும் நம்பா தீர்கள் உங்களையே நம்புங்கள். சொந்தக்காலில் நில்லுங் கள் அதுதான் நல்லது'' என்று சொல்வார்கள்.சிலர் இவ் இரண்டிலும் எதை நம்புவதென்று தெரியாமல் குழப்பத் திலேயே காலத்தை கடத்தி முடிப்பவர்கள் நிறையப் பேர்.

நடப்பவை எல்லாம் விதியின் கையில் இருக்கிறதா? நமது கையில் உள்ளதா? ஒரு பெரியவர் சொல்கிறார் எல்லவாற்றுக்கும் விதியையே நம்பிக் கொண்டிருக்கக் கூடாது சொந்த முயற்சியும் வேண்டும் இப்போது உதாரணத்திற்கு நாம் காசிக்குப் போக வேண்டுமென்று வைத்துக்கொள்ளுங்கள் ரயிலில போக வேண்டும். ரயில் புறப்பட்டு தன்பாட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும் அது புறப்படுவதற்கு முன் அதைப் போய்ப் பிடிக்கவேண்டியது நாம் தான்.

ரயிலை நமது வீட்டு வாசலில் வந்து நின்று நம்மைத் தூக்கி வைத்துக்கொண்டு போய் காசியில் இறக்கி விடாது. இறக்கிவிட்டு விட்டு "கவனமாகப் போய் கங்கையில் குளித்துவிட்டு வாருங்கள். உங்களை மீண்டும் தூக்கிக் கொண்டு போய் உங்கள் வீட்டில் விடுகிறேன்'' என்று சொல்லாது.

ரயில் தனக்கென்று போட்டிருக்கும் தண்டவாளத் தில் போய்க்கொண்டிருக்கும் எந்தநேரத்தில் எந்த இடத்தில் அதைப்பிடித்து ஏற வேண்டுமோ அது உங் கள் கையில் தான் உள்ளது. ரயில் தான் விதி. அதைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போகிறோம் அல்லவா அதுதான் மனித முயற்சி. எல்லாம் விதிப்படி நடக்கும என்று சொல்லிக் கொண்டிருந்து பரீட்சை எழுதாமல் நீங்கள் பாட்டுக்கு வீட்டில் உட்கார்ந்திருந்தால் பாஸாவது எப்படி?

ஒருவன் இருந்தான்.அவனுக்கு எப்போதும் தன்மீது நம்பிக்கை கிடையாது அவன் ஒருமுறை சென்னை யிலிருந்து புறப்பட்டு விழுப்புரத்துக்குப் போனான். ரயிலில் தான் போகிறான். எக்மோரில் இரவு 9.00 மணிக்கு ஒரு ரயில் புறப்படும் சரியான நேரத்திற்கு இவன் எழும்பூர் ரயில் நிலையத்திற்குப் போய் விட்டான். ரயில் நின்று கொண்டிருந்தது. அதிக சனக்கூட்டம் வேறு இவன் ரயிலில் ஏறி மேல்தட்டில் ஏறிப் படுத்துக் கொண்டான்.

அவன் விழுப்புரத்தில் இறங்க வேண்டும்.ஆனால் உறங்கிவிடுவேனோ என்ற பயம். கீழ் இருக்கையில் சிலர் அமர்ந்திருந்தனர். அதில் ஒருவரிடம் "சார் நீங்கள் எந்த ஊருக்குப் போக வேண்டும்?" என்று கேட்டான். "நான் தஞ்சாவூருக்குப் போக வேண்டும்"என்றார் அவர். "அப்படி யென்றால் நீங்கள் ஒரு உதவி செய்ய வேண் டும்" என்றான் இவன். "என்ன செய்ய வேண்டும் சொல் லுங்கள்" என்று அவர் கேட்டார். "சார் நான் விழுப் புரத்தில் இறங்கவேண்டும் அதனால் விழுப்புரம் வந்ததும் என்னை மறந்துவிடாமல் இறக்கிவிடுங்கள்'' என்றான்."ஏன் உங்களுக்கு விழுப்புரம் தெரியாதா?'' என்றார் அவர். "அப்படி இல்லை நான் உறங்கிவிடுவேன் உறக்கத் திலிருந்து மீள்வது எனக்குச் சிரமம்'' என்றான் இவன்.

"அப்படியென்றால் விழுப்புரம் வந்ததும் நான் உங்க ளைத் தட்டியெழுப்புகிறேன் நீங்கள் விழித்துக் கொள்ளா விட்டால் என்ன செய்வது?"என்றார். "சார்... நீங்கள் அதற்காகக் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள் எழுப்பிப் பாருங்கள் நான் எழும்பாவிட்டால் என்னை உருட்டி வெளியே தள்ளிவிடுங்கள்'' என்றான்.இவரும் சரி என்றார்.

ரயில் புறப்பட்டது எல்லோரும் உறங்கிவிட்டனர். அதிகாலை ரயில் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் போய் நின்றது. தஞ்சாவூரில் இறங்க வேண்டியவர் இறங்கி நின்றார். திடீரென்று வந்து அவரின் கையைப் பிடித்தான் அந்த ஆள். விழுப்புரத்தில் இறங்க வேண்டியவன் தஞ்சாவூருக்கு வந்துவிட்டான். அவனுக்குச் சரியான கோபம் "என்ன சார் இது? நான் சென்னையில் படித்துப் படித்துக் கூறினேன் விழுப்புரம் வந்ததும் என்னை உருட்டி யாவது விடுங்கள் என்று. இப்போது நான் தஞ்சாவூருக்கு வந்துவிட்டேன்இந்த நேரம் நான் நிச்சயமாக விழுப்புரத்தில் இருக்க வேண்டும்" என்று புலம்ப ஆரம்பித்தான்.

அந்த தஞ்சாவூர்க்காரர் இதைச் சரியாகக் கவனிக் காமல் எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந் தார். அதைப் பார்த்ததும் இவனுக்கு இன்னும் கோபம் "என்ன சார் நான் பாட்டுக்குக் கத்துகிறேன் நீங்கள் எதையோ யோசித்துக்கொண்டு நிற்கிறீர்களே" என்றான். அதற்கு அவர் சொன்னார் " தவறுதலாக தஞ்சாவூருக்கு வந்த நீயே இவ்வளவு கத்துகிறாயே. தவறுதலாக நான் விழுப்புரத்தில் ஒருத்தனை வெளியே உருட்டி விட்டேன் அவன் இந்நேரம் எவ்வளவு கத்துவான் என்று யோசித்துப் பார்க்கிறேன் என்றாராம். இன்னொ ருவரை நம்பினால் இப்படித்தான் வரும்.

சரி நம்பிக்கையைப் பற்றி நான் சொல்ல வருவது என்னவென்றால் இந்த உலகில் நம்மை மீறிய செயல் களும் உண்டு. நம்மால் முடியக் கூடிய செயல்களும் உண்டு இவை இரண்டையும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு சாமர்த்தியமாக வாழவேண்டியது நமது கடமை.


தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசியல் அமைப்பை புறந்தள்ளிவிட்டு தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் சந்திரிகாவை வைக்க முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பித் திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாக வடக்கு-கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை



ஆளும் கூட்டணி அரசாங்கம் நடாத்த முழு மனதுடன் முன் வரவேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவா பெரிய சாமி சந்திரசேகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் சென்றிருக்கும் இவர் ஊடகவியல ாளர்களுக்கு அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

அரசியல் அமைப்பைப் புறந்தள்ளிவிட்டு மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றன.

இதனால் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பொன்றின மூலம் நாட்டு மக்களின் அங்கீகாரத்தைக் கொண்டு வரப் போகின்றது.

இதேபோலவே தமிழ்பேசும் மக்கள் நீண்டகாலம் பிரச் சினைகளுக்கு தீர்வொன்றினைக் காணும் முகமாக வடக்கு-கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடாத்த வேண் டும். இதன்மூலம் இரு தசாப்தகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டவேண்டும்.

இன்னும் 6 வருடங்களுக்கு பதவியிலிருக்க விரும்பும் ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தமிழர் பிரச்சி னைக்கு தீர்வைக்காணவும் முன்வர வேண்டும்.

மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி ஆட்சியில் அமர அரசியல் யாப்பில் இடமில்லை.அத்துடன் பாராளுமன் றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவும் முடியாது.

எனவே உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவது தான் சாத்தியமான விடயமாகும்.

இவ்விதத்தில் சிங்களப் பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு அவர் ஜனாதிபதியாக நீடிப்பாராக இருந்தால் தமிழ்மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் யாவுமே மக்கள் அங்கீகாரத்துடன் நடப்பதாக ஆகிவிடும்.

இத்தகைய வாக்கெடுப்பொன்றை ஜனாதிபதியினால் நடாத்த முடியுமென்றால் தற்போது சர்ச்சையில் இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் கோருகின்ற இடைக்காலத் தன் னாட்சி அதிகாரசபை பற்றியும் தமிழ்மக்கள் மத்தியில வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

சிறுபான்மை மக்களின் விருப்பைத் தெரிந்துகொள்ள சர்வஜன வாக்கெடுப்புக்கள் உலக நாடுகளில் ஏற்கனவே நடந்திருக்கின்றன என்பது இதற்கு முன்னுதாரணமாகும். தமிழர்களுக்கு வழங்குகின்ற அரசியல் உரிமை தொடர்பாக நாடளாவிய ரீதியில் வாக்கெடுப்பு நடாத்தினால் அது ஏமாற்று வேலையாகவே அமையும்.

அரசு நேர்மையாக தமிழர்களுக்கு உரிமை வழங்கு வதில உறுதியாக இருந்தால் எத்தகயை ஏற்பாட்டை மேற் கொள்ளப் போகின்றது என்பதைக் கூறி தமிழ்மக்கள் மத்தி யில் மட்டும் வாக்கெடுப்பினை நாடத்தி அங்கீகாரத்தைப பெறவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்?

(கொழும்பு)

மீன்பிடித் தொழிலில் தடைசெய்யப்பட்ட முறைகளை பயன்படுத்துவதற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க கடற்றொழில் நீரியல் வள அமைச்சு தீர்மானித்துள்ளது.

சட்டவிரோதமான மீன்பிடி முறைகளுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை யென மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும்,இந்த மீன்பிடி முறையினைப் பாவிப்போரின் அழுத்தங்களுக்குக் கீழ்ப்படியாமல் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த ஆலோசனை தமக்கு சிலரால் வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமைச்சருக்கும் மாவட்ட கடற்றொழிலைக் கண் காணித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள் ளார்.

டைனமைட், லைலாவலை,சுருக்குவலை உட்பட பல்வேறு தடைசெய்யப்பட்ட முறைகள் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. பெரிய வர்த்தகர்கள் தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதனால் சாதாரண மீனவர்கள் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ள தாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (க-121)

# இராசி பலன்

**19.10.2004**

**(ஐப்பசி 03, செவ்வாய்க்கிழமை)**

**சஷ்டி முன்னிரவு 09.39 மணிவரை**

**மூலம் முன்னிரவு 07.57 மணிவரை**

**இராகுகாலம் 3.02- 4.32 மணிவரை**

**சுபநேரம் 10.32 - 12.02 மணிவரை**

**சஷ்டி விரதம், அமிர்த சித்தம்**

**3 ஆம் நாள் இலக்குமி பூசை**

- **மேடம்** — *புதிய திட்டமிடல், பிதா சிந்தை, எதிர் பாராத செலவு, சரீரப் பிரயாசை.*
- **இடபம்** — *எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங் கல், அஜீரணக்கோளாறு, பணக்குறைவு.*
- **மிதுனம்** — *களஸ்திர நன்மை, நல்ல செய்தி, எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல்*
- **கடகம்** — *மாதர்நட்பு, மனமகிழ்ச்சி, தேகநலன், செய்தொழில் முன்னேற்றம்.*
- **சிங்கம்** — *வாக்கு மேன்மை, காரிய இடையூறு, உடல்நலக்குறைவு, பணத்தட்டுப்பாடு.*
- **கன்னி** — *தன்னம்பிக்கைக் குறைவு, ரோக நிலை, சிந்தனை மிகுதி, பணவிரயம்.*
- **துலாம்** — *மனோதைரியம், அந்நியர் சந்திப்பு, பிரயாண நன்மை, புதிய பொருள் சேர்க்கை.*
- **விருச்சிகம்** — *போசன சுகக் குறைவு, மனோசங்க டம், அதிக செலவு, திடீர் நன்மை.*
- **தனுசு** — *வெகுமானம், சயன சுகம், தொழில் சிந்தை, நல்ல முயற்சி.*
- **மகரம்** — *பிறருக்கு உதவி செய்தல், பணச் செலவு, காரிய தாமதம், புதிய திருப்பம்.*
- **கும்பம்** — *தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப சுகம், தனதானிய சேர்க்கை, கீர்த்தி.*
- **மீனம்** — *இஷ்ட சித்தி, ஆரோக்கிய நிலை, தூரதேசத் செய்தி, போசன நன்மை.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**- வள்ளவன்**

## அரசதுறை வேலையை எதிர்பார்க்காது சுயதொழிலில் ஈடுபடுவது சிறந்தது

# ரிசாத் எம்.பி சுட்டிக்காட்டு

(புத்தளம்)

"அரச தொழில்களை மட்டும் எதிர்பார்த்து நிற்பதை விடுத்து சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதானது மேலும் தம்மை சுயமாக வாழ வழி அமைக்கும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சூடுவேந்த பிளவு, ஆண்டியாப புளியங்குளம், பாவற் குளம் பகுதிகளில் தையல் பயிற்சிகளை நிறைவு செய்த யுவதிகளுக்கு,தையல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் நடை பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

60 யுவதிகளுக்கு இந்தத் தையல் இயந்திரங்கள வழங் கபபட்டன .பிரதேச செயலாளர் செல்வி டி.துரைசாமி தலை மையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் உதவிப் பிரதேச செயலாளர் எம். மூசீன் ,முன்னாள் எம்பி எம். என். அய்யூப் , மீள் குடியேற்ற செயலணி இணைப்பாளர்களான எம்.அலிகான், எம். ஐ.எம். இபறாஹீம்,மௌலவி எம். தாஹிர், கலாநிதி யூசுப கே. மரைக்கார் உட்பட மேலும் பலரும கலந்துகொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள தற்போது வாழும் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளைக் கூட பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். இந்தநிலையில் அவர்கள் வருமா னம் ஈட்டும் தொழில்களைப் பெறுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாதவொன்றாகவுள்ளது.

இந் நிலைமைகளை கவனத்தில் கொண்டதன் விளை வாக கடந்த ஆட்சிக் காலத்தின் போது சாதாரண ஒரு நாடாளு மன்றப் பிரதிநிதியாக இருந்து கொண்டு 48 தையல் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து அதன் மூலம் யுவதிகள் தத் தமது வீடுகளில் இருந்து கொண்டு வருமா ணம் உழைக்கும வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தையல்துறையில் திறமையான பயிற்சி பெற்ற ஆசிரி யைகள் உருவாகியுள்ளனர். இவர்கள் தாம் பெற்ற பயிற்சி யின் மூலம் இன்னும் பல யுவதிகளை பயிற்றுவிக்க முடியும்.

அதேவேளை, எதிர்காலத்திலும் இதுபோன்ற இன்னோ ரன்ன சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார். (ந-15)

# அஞ்சா நெஞ்சுரத்தோடு துஞ்சாதுழைத்த சிங்கம் வஞ்சகத்தனத்திற்கு இரையானதோ?

பதினொராவது பாராளுமன்றத்தின் அமைச்சரவை பதவியேற்ற தினததன்று அதாவது பொது ஜன ஐக்கிய முன்னணி தனது இரண்

**பி.பி.சி. சேவையி யாழ்ப்பாண நிருபரும் இலங்கையின் பல தமிழ், சிங்களப் பத்திரிகைகளின் செய்தியாளருமான மயில்வாகனம் நிமலராஜன் கொல்லப்பட்டமை இந்நாட்டில் ஊடக சுதந்திரத்தின் சாவு மணியாக கூறமுடியும்.**

**-திவயின சிங்கள தினசரியின் 2000.10.23 திகதி ஆசிரியர் தலையங்கத்தில் இருந்து**

டாவது ஆட்சிக்காலத்தின் முதலாவது நாளை ஆரம்பித்தவேளை, வடபுலத்தின் யுத்த நிகழ்வுகளை, மனித உரிமை மீறல்களை அஞ்சா நெஞ்சத்துடன் பக்கச்சார்பின்றி வெளியிட்டுவந்த செய்தியாளரான மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இது ஜனநாயகத்தை நேசிக்கும் சக்திகளுக்கு பலத்த அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஊடகத்துறை குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் எத்தகைய நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமது பணிகளை மேற்கொள்கிறார்கள் என்பதற்கு நிமலராஜனின் படுகொலை கட்டியம் கூறுகிறது.

யுதத சூழல் 1983களில் துளிர்விட்டு விஸ்வரூபம் எடுத்தநிலையில் தமிழ் மக்கள் திசை தெரியாது திக்குமுக்காடிவரும் இக்கட்டான வேளையில் தமிழ் ஊடகவியலாளர்கள் பேனாவின் சக்தியை மக்கள் பலத்தை கவசமாகக் கொணடு செயற்படும் போக்கு 1990களின் பின்னர் ஏற்பட்டது.

இதற்கு கால்கோலிட்ட ஊடகவியலாளர்களில் நிமலராஜன் குறிப்பிடத்தக்கவர். யாழ்குடாவில் இருந்து யுத்த செய்திகளை வெளியே கொண்டுவரும் தார்மீகப் பொறுப்பை அங்குள்ள பல செய்தியாளர்கள் அச்சம் காரணமாக விரும்பியோ விருமபாமலோ தட்டிக்கழித்து வந்த நிலையில் நிமலராஜன் தன்னை ஒறுத்து அர்ப்பணித்து தமிழத் தேசிய பிரக்ஞையுடன் 1990களில வீரியத்துடன் தனது பணியை ஆரம்பித்தார்.

எழுத்துக்களை, வார்த்தைகளை நழுவிக்கொள்ளாது அப்பட்டமாக துல்லியமாக உறைக்கவேண்டியவர்

**அவர் வழங்கிய செய்தி, தகவல்கள் ஆகியவை வடக்கு-கிழக்கு விசேடமாக வடக்கை அடிப்படையாகக்கொண்ட மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள் ஆகியவையாகும். அவர் தம் கடமையைத் துணிச்சலாகச் செய்தார், சுயாதீனமாகச் செய்தார்.**

**-லங்கா தீப சிங்கள தினசரியின் 2000.10.23 திகதி ஆசிரியர் தலையங்கத்தில் இருந்து...**

களுக்கு உறைக்கும் வண்ணம் வெளியிட்டுவந்த நிமலராஜன் களத்துக்குச்சென்று நேரடியாக மக்களோடு கலந்து அவர்களது உணர்வுகளை பிரதிபலித்ததன் காரணமாகவே இலங்கை தமிழ் ஊடகத்துறை மட்டுமன்றி சர்வதேச ஊடகவியலாளர்களும் கதிகலங்கி கண்ணீர் சிந்தி அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

அமரர் மயில்வாகனம் நிமராஜனின் ஊடகத்துறைச் செயற்பாடு வடக்கு-கிழக்கு தமிழ் ஊடகவியலாளர்களின் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமலல சிலருக்குத் துணிச்சலையும் கூடக கொடுத்தது என்றால் மிகையாகாது.

நிமலராஜனின் பெற்றோர் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக கொண்டிருந்த போதிலும் கொழும்பையே வதிவிடமாகக் கொண்டவர்கள். 14.05.1961ஆம் ஆண்டு பிறந்த நிமலராஜன் பம்பலப்பிட்டி இந்துக் கலலூரியில் கல்வி கற்றவர். கொழும்புச சூழலில் வாழ்ந்த காரணத்தினால சிங்களம், ஆங்கில மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவருடைய தந்தை மயில்வாகனம் பதிப்பகத்துறைசார்ந்த தொழிலில ஈடுபட்டதால் நிமலராஜனின் ஆர்வமும் அநதத் துறையில் ஏற்பட்டது தவிர்க்க முடியாததே.

1983 கறுப்பு யூலை கலவரம் கொழும்பு நகரில் வாழ்ந்த தமிழர்களை மட்டுமல்ல:

வடக்கு-கிழக்கில் வாழ்ந்த கணசமானவர்களை வெளிநாடுகளுக்குப் புலம்பெயரசசெய்த நிலையில் நிமலராஜனின் பெறறோர் தாய்மண்ணின் மீதுகொண்ட ஆர்வமேலீட்டால் யாழ்ப்பாணத்திற்குப் புலம்பெயர்ந்தார்கள்.

எனினும் நிமலராஜனின் சகோதரிகள் வெளிநாடுசென்று அவரை வருமாறு பல தடவைகள் அழைப்புவிட்ட நிலையிலும் அவர் செல்லாது தான் நேசித்த மக்களுக்காகவும் வாழ்நத மண்ணிற்காகவும் தன்னை அர்ப்பணிக்கத் தீர்மானித்தார்.

மயில்வாகனம் நிமலராஜன் ஊடகத்துறையில் பிரவேசித்தது கூட எதிர்பாராத நிகழ்வாகும். 1987களில் யாழ்.குடாவில் வெளிவந்த 'முரசொலி' பத்திரிகையில் விளம்பரச் சேகரிப்பாளராகவே ஊடகத்துறையில் நுழைந்தார். செய்யும் தொழிலில பற்றுறுதியும் சலிப்பில்லாத உழைப்பும் கொண்ட நிமல் அப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரைவிட கூடிய வருமானத்தைப் பெற்றிருந்ததாக அவரோடு அவ்வேளை பணியாற்றியவர்கள் விதந்து கூறுவார்கள்.

பின்னர் ஈழமுரசு, ஈழநாதம் பத்திரிகைகளில் விநியோக மேற்பார்வையாளராகவும் விளம்பர சேகரிப்பாளராகவும் கடமைபுரிந்த நிமலராஜன் அவ்வேளை கடமை நிமித்தம் தான் பல்வேறு இடங்களுக்கும் செல்லும்போது செய்திகளையும் சேகரித்து தான்சார்ந்த செய்தி நிறுவனத்திற்கு வழங்கிவந்தார். ஆனால் அவர் வழங்கும் செய்தி தரம் மிக்க ஊழல்களை அமபலப்படுத்துபவைகளாகவே அமைந்தன. அவரின் ஆர்வத்தையும் திறமையையும் இனங்கண்ட ஆசிரிய பீடத்தினர் அவரை ஊக்குவிக்க தலைப்பட்டனர். 1990களைத் தொடர்ந்து யாழ்ப்பாண ஊடகத்துறையில் கடமை புரிந்த பலர் புலம்பெயர்ந்ததையடுத்து காலத்தின் தேவை கருதி ஊடகத்துறை நிமலராஜனை உள்வாங்கிக்கொண்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆடசியினர் 1995 இறுதி வாக்கில் யாழ்.குடாவில் சூரியகதிர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து நிலைகொண்டதை அடுத்து எழுந்த சமூக சூழல் நிமலராஜனிடம் பல்வேறு நெருடல்களை உத்வேகத்தை அளித்த நிலையில் பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்கள் அவரை நாடும் நிலை ஏற்பட்டது. செய்யும் தொழிலில் பற்றுறுதியும் வேகமும் கொண்ட நிமலராஜன வெளிநாட்டு ஊடகங்களான பி.பி.சி., ஐ.பி.சி.மற்றும் சூரியன் ஏவ்.எம்., சுவர்ண ஒலி வானொலிகளுக்கும் ராவய, ஆதவன், வீரகேசரி செய்தித்தாள்களுக்கு யாழ்நகரின் நிகழவுகளை அன்றாடம் அனுப்பி வருபவராக தொழிற்பட்டாா.

செம்மணிப் புதைகுழி விவகாரம் சூடு பிடித்ததற்கு நிமலராஜன் ஒரு காரணகர்த்தா. யாழ்.குடாவில் உள்ள மனித உரிமை நிறுவனங்கள் அப்பட்டமாக சொல்லத்தயங்கிய பல்வேறு ஆயுதக்குழுக்களின் அடாவடித்தனங்களை தெட்டத் தெளிவாக வெளிக்கொணர்ந்தார். அடக்கிவாசிக்கும் பழக்கம இல்லாதவராக சொல்லவேண்டியவற்றை தெட்டத்தெளிவாக உறைத்த துணிச்சலும் தைரியமும் மிக்க செய்தியாளர் இவர்.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. காலத்தில இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்த றிச்சாடி சொய்சா அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கியதேசியக் கட்சியின் குண்டர்களால் படுகொலை செயயப்பட்டார். அதே பாணியிலேயே நிமலராஜனும் யாழ்.குடாவில் அரசபடைகளின் அத்துமீறல்களை வெளிக்கொணர்ந்தமையால் படுகொலை செய்யப்பட்டார். ரிச்சாட்டி சொய்சா படுகொலையை ஐக்கியதேசியக்கட்சயின் ஆட்சியாளர்கள் தட்டிக்கழிக்க முடியாது என்று இன்றைய ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னர் கருத்துத் தெரிவிததார். அதேபோல தற்போது ஆட்சி செய்யும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும நிமலராஜன் படுகொலைச் சம்பவததை தட்டிக்கழிக்க முடியாது என்பதே அனேக ஊடகவியலாளர்களது உள்ளத்து உணர்வாகும்

படையினரின் கட்டுப்பாட்டிலிருக்கும் சுண்டுக்குளிப் பிரதேசத்தில இரவு 10.00மணிக்கு அதுவும் ஊடரங்கு வேளையில் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். அவ்வேளை, ஆயுதங்களுடன் நடமாடககூடியவர்கள் யாராக இருக்கலாம் என்பதை யாழ்ப்பாணத்துப் பால குடிக் குழந்தைகூட கூறிவிடும்.

இந்நிலையில் அரசு பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொணடு குற்றவாளிகளை முன்நிறுத்த வேண்டும. தொங்கு அரசாங்கம் என்பதற்காக தயங்கக்கூடாது. இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கொலையென்று கூறி தட்டிக்கொள்ளாது ஆழமான விசாரணைகள் மூலம் கண்டுபிடிக்கக் கூடிய குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேணடும். நிமலராஜன் படுகொலை குறித்து உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளா அமைப்புக்கள் மட்டுமல்ல அரசியல் தலைவர்களும் கண்டனங்களை வெளியிட்டுள்ளார்கள்.

யுத்தம் நிகழும் சூழ்நிலையில் ஜனநாயகம் ஓரளவுக்காவது தப்பிப்பிழைப்பதற்கு ஊடகத்துறையும், ஊடகவியலாளர்களது சேவையும முககியமானது. இந்நிலையில் ஜனநாயக ஆட்சி நிலவுவதாகக் கூறப்படும் நாட்டில் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டதை அரசு தட்டிககளிக்க முடியாது. ஏற்கனவே பல்வேறு மனித உரிமை மீறல்கள் படுகொலைகள் இடம்பெற்றபோது ஜனாதிபதி விசாரணைக்கு உததரவிட்டும் குற்றவாளிகளை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. அதேபோல் நிமலராஜன் படுகொலை விசாரணைகளும் இழுத்தடிக்கப்படாது போலி ஜனநாயக சக்திகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தவேண்டும்.

நண்பனே நிமலராஜன்! செய்திககாக வாழ்ந்த உன்னை படுகொலை செய்ததன் மூலம் தமிழ் ஊடகத்துறையை நசுக்க கனவு காணும் சக்திகளுக்கு உனது மரணம நிச்சயம் தகுந்த பாடத்தைக்கொடுக்கும்.

அவரின் மறைவுக்கான காரணத்தை உணர்ந்து அஞ்சாது செயற்படுவதே நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

**அமரர் ஜி.நடேசன்**



***...விரும்பத்தகாத இத்தகைய மரணங்களைத் தடுக்க, தவிக்க வேண்டுமாயின் ஊடகவியலாளர்கள் பொய்வேடம் களைந்து உளமார ஒன்று சேர்வதும், நடுவுநிலை தவறாது உள்ளதை உள்ளவாறு மிகைப்படுத்தல் இன்றி உலகிற்கு எடுத்துக் கூறுவதும் காலத்தின் தேவையும் கடவுள் நீதியுமாகும .***

**வலம்புரி ஆசிரியர் தலையங்கம்**

*22.10.2000*

**பத்திரிகையாளர் நிமலராஜன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்று தமிழ், சிங்களப் பத்திரிகைகள்- வானொலி போன்ற ஊடகங்களுக்கு ஒரே நேரத்தில் பணியாற்றக்கூடிய வல்லமை மிக்கவராக விளங்கினார்.**

**அரசியல் வார ஏடாகிய 'ராவய' பத்திரிகையிலும், சூரியன் எவ்.எம்.தமிழ் சேவையிலும், பி.பி.சி.யின் சிங்கள, தமிழ் சேவைகளிலும், ஐ.பி.சி.போன்ற சர்வதேச சேவைகளிலும் இவர் சேவையாற்றியுள்ளார். வட.இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளராகவும் செயற்பட்டார். இவரின் நான்காம் ஆண்டின் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.**

**அன்புக்குரிய நிமால்!...**

**கொடூர யுத்தத்தால் முறிந்த**
**வடக்கு-தெற்குப் பாலத்தை**
**மீண்டும் கட்டியவர் நீர்.**

**நீர், தமிழ் மக்களின் அழுகைக் குரலை**
**சிங்களத்தில் விளக்கமளித்தீர்**
**அதைக்கேட்டு நாங்களும் அழுதோம்.**

**உன்னைக் கொலை செய்தாலும்**
**வடக்குடன் இணைந்த எம் உள்ளங்கள்**
**பிரிக்கமுடியாது**
**தலை வணங்கி நாம், உன்னை மதிப்போம்**
**-ராவய நண்பர்கள்.**

# இலங்கையில் சமாதானம் ஏற்பட்டால் அந்தப் பெருமை ரணிலுக்கே உரியது

## முன்னாள் இந்தியப்பிரதமர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய அமைதிப் படையினை இலஙகைக்கு அனுப்பியதன் மூலம் ஏற்கனவே தமது கைகளை சுட்டுக்கொணடதை தாம் மறக்கவில்லை என முன்னாள் இந்தியப் பிரதமரும், வெளியுறவுத்துறையில் முக்கியத்துவம் மிக்கவராக விளங்குபவருமான இந்திரகுமார் குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

இலஙகையின் இனப்பிரச்சினை தொடர்பில் சரியான கொள்கைகள் முன்கொண்டு செல்லப்பட வேண்டும்.

இந்த நிலையில், இந்தியாவானது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் நேரடியாகத் தொடர்பு கொள்வதை விரும்பவில்லை. ஆனாலும் இந்தியாவின் இச் செயற்பாடு எனக்கு வருத்தமளிக்கின்றது.

ஏனெனில் எனது பழைய நண்பரான இலங்கையின் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுககு அண்மையில் வந்த போது என்னை சந்தித்திருந்தார். அச்சந்திப்பில் இந்தியா இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

இரு தசாப்த காலமாக இடம் பெற்ற போரினை நிறுத்தியதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இலங்கையில் சமாதான முயற்சியினை ஆரம்பித்துவைத்த பெருமை ரணிலையே சாரும்.

அத்துடன் இம் முயற்சிகளை வெற்றிகரமாக நடாத்தியமை இலங்கையில் நடந்த பொதுத்தேர்தல குழப்பிய போதும், சமாதானம் ஏற்பட்டால் அதற்கான முழுப்பெருமையும் ரணிலையே சேரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

# ஈராக்கில் கார் குண்டுத்தாக்குதல் 6பேர் பலி 27பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள ஹொட்டல் ஒன்றின் அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த கார் குண்டுத் தாக்குதலில் 6பேர் பலியாகியுள்ளனர். 27பேர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பான தகவலை அந்நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நகர மையத்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இத்திடீர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் இருவர் அமெரிக்கப் படையைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலையடுத்து நகரின் பல இடங்களிலும் அமெரிக்கப்படைகள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டன.

இக்கார் குண்டுத்தாக்குதலால் சம்பவ இடத்திலிருந்த இருமாடிக் கட்டடங்கள சேதமடைந்திருப்பதுடன் அப்பகுதிகளில் நின்றிருந்த வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலை ஷியா முஸ்லிம்களே நடத்தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் எவரும் இத்தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை. (ப)



ஆஸ்திரேலியாவில் ஒரு மிருக காட்சிச் சாலையில் மனிதர்கள் தங்கள் உள்ளங் கையில் வைக்கும் அளவுக்கு மிகச் சிறிய கோலா கரடி ஒன்றுள்ளது. அதனை சுற்றுலாப்பயணி ஒருவர் தன் கையில் வைத்திருப்பதைப் படத்தில் காணலாம்.



இந்திய - வியட்நாம் நல்லுறவைத் தெரிவிக்கும் வண்ணம் புதுடில்லியில் நடந்த வியட்நாம் கலைக்குழுவினரின் கலாசார நடனம் இது.

# சீனாவின் செயற்கைக்கோள் வீட்டின் மீது வீழ்ந்தது

(பெய்ஜிங்)

விண்ணிலிருந்து பூமி திரும்பிக்கொண்டிருந்த சீனாவின் செயற்கைக்கோள் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் மீது விழுந்தது. இந்தச் சம்பவத்தில் அந்த வீடு சேதம் அடைந்தது.

விண்ணில் அறிவியல் பரிசோதனைகள் செய்வதற்காக விண்ணுக்கு அனுப்பப்பட்டிருந்த சீன செயற்கைக்கோள் பரிசோதனை செய்தபிறகு பூமி திரும்பிய போது தற்செயலாக சிச்சுவான் மாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றில் உள்ள வீடு மீது விழுந்தது.

இந்தச் சம்பவத்தால் வீடு தரை மட்டமாகியது.

எனினும் அந்தச் செயற்கைக்கோளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. நிபுணர்கள் அந்த இடத்துக்கு வந்து அதை ஆய்வு செய்து எடுத்துச் சென்றனர்.


# ஆப்கான் அதிபர் தேர்தலில் ஹமீத் கர்சாய் முன்னிலை

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தான் அதிபர் தேர்தலில் இடைக்காலத் தலைவர் ஹமீத் கர்சாய, தமது போட்டியாளர்களைவிட முன்னணியில் இருப்பதாக முதல்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் ஜனநாயக ரீதியில் தேர்வு செய்யப்பட்ட முதலாவது அதிபராகிறார் கர்சாய். கடந்த 9ஆம்திகதி அங்கு தேர்தல் நடைபெற்றது. தலைநகர் காபூலிலும் பிற மையங்களிலும் வாக்கு எண்ணிக்கை கடந்த சனிக்கிழமை காலையில் தொடங்கியது. இதன்போதே தொடர்பாளர் சில்வானா புஸியான இவ்வாறு தெரிவித்தார்.

"வெற்றி பெற்றவர் யாராக இருந்தாலும், கர்வத்துடன் செயல்படக்கூடாது; அப்படி இருந்தால் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள்" என மதப் பிரசாரகர் முல்லா உபைதுல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ள நிலையில் அமெரிக்காவில் டேடொனா பீச் என்ற இடத்துக்கு தேர்தல் பிரசாரம் செய்ய வந்த அமரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது மனைவி லாராவுடன் மேடையில் தோன்றியபோது ஆதரவாளர்கள் ஆரவாரிக்கும் காட்சி.

# சூடானில் அகதிகளின் நிலை அவலம் 7மாதங்களில் 70,000பேர் பலி

சூடான் நாட்டில் கடந்த மார்ச் 1ஆம் திகதி முதல் கடந்த சில நாட்களுக்கு முன்புவரை ஏறத்தாழ 70,000 அகதிகள் நோயினாலும், பல்வேறு ஊட்டச் சத்துக் குறைபாடுகளினாலும் இறந்துள்ளனர் என்ற அதிர்ச்சி தரும் தகவலை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது.

சூடான் நாட்டின் டார்பர் பகுதியில் இந் நெஞ்சை உருக்கும் சம்பவம் நடைபெற்றுள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் பேச்சாளர் டேவிட் நெபர்றோ தெரிவித்தார்.

இந்தப் பட்டியலில் இயற்கையாக இறந்தவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

சூடான் நாட்டில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் வன்முறைகள் காரணமாக பல லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு அகதிமுகாம்களில் தங்கியுள்ளோருக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளோ உரிய சுகாதார வசதிகளோ கிடைப்பதில்லை.

இதனால் இவர்கள் நலிவுற்று இருப்பதால் பல்வேறுபட்ட உடலியல் தாக்கங்களுக்கும் இலக்காகி இறந்து வருகின்றனர்.

சூடான் நாட்டின் அரசியல் ஸ்திரமின்மையாலும், அடிக்கடி இடம்பெறும் வன்முறைகளாலுமே இத்தகைய நிலை அந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டும் உலக சுகாதார ஸ்தாபனம், தொடர்ந்தும் அங்கு சுகாதார நிலைமைகள் மிக மோசமாக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது. (ப)

## WORLD NEWS உலக தரிசனம்


# செயற்கை முறைமூலம் ஆண்களுக்கு அகன்ற மார்பு

பெண்களைக் கவர சீனாவில் ஷங்காய் நகரில் ஆண்கள் செயற்கை மார்பகம் பொருத்தும் நிலை அதிகரித்து வருகிறது.

அறுவைச் சிகிச்சை மூலம் செயற்கை மார்பகம் பொருத்தி பெண்கள் தங்களை அழகுபடுத்துகிறார்கள் அல்லவா? அது போல சீனாவில் ஷங்காய் நகரில் ஆண்கள் செயற்கை மார்பகம் பொருத்தும் நிலை அதிகரித்து வருகிறது.

உலக ஆணழகர்கள் போல வாட்ட சாட்டமான மார்பக உடல்கட்டுடன் திகழ விரும்பும் ஆண்கள் அதிகரித்து வருகிறார்கள்.

பெண்களைக் கவரவும் மற்றவர்களிடம் மதிப்புப் பெறவும் இவ்வாறு அவர்கள் செய்வதாகக் கூறப்படுகிறது. பெண்களுக்கு பொருத்தும் செயற்கை மார்பகத்திலிருந்து வடிவமைப்பில் இது வேறுபடுகிறது. ஆனால் அலர்ஜித்தன்மை அல்லது இருதயநோய் உள்ளவர்கள் இந்த அறுவைச்சிகிச்சை செய்வது ஆபத்து. மேலும் இயற்கையாக உடல் பயிற்சி மூலம் அகன்ற மார்பை பெறுவதுதான் சாலச்சிறந்தது என்று அங்குள்ள டாக்டர்களே கூறி வருகிறார்களாம். (ப)



ஆண்களுக்கு மார்பக சிகிச்சை செய்யும் வைத்திய நிபுணர் ஒருவர் செயற்கை மார்புகளை தயாரிப்பதை படத்தில் காணலாம்.

# பயணிகள் பேருந்து நதியினுள் கவிழ்ந்ததில்; 60பேர் பலியாயினர்

(டெஹ்ராடூன்)

இந்தியாவின் உத்திராஞ்சல் மாநிலத்திலுள்ள நர்மதை நதியினுள் பயணிகள் பேருந்து ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 60பேர் பலியாகியிருக்கின்றனர்.


உத்தராஞ்சல் மாநிலத்திலுள்ள உத்தர்காசி மாவட்ட மலைப் பாதையூடாக யமுனோத்திரி ஆலயத்திற்கு சென்றுகொண்டிருந்த பேருந்து இவ்வாறு நதியினுள் கவிழ்ந்திருக்கிறது.

மிகவும் ஒடுக்கமான மலைப்பாதையில் லாவகமாக. பேருந்தை ஓட்டி வந்த சாரதி, வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாது மேற்படி வீதிக்கு அருகே பலநூறு ஆழத்தில் ஓடிக்கொண்டிருந்த நர்மதை நதியினுள் பேருந்தை பாயவிட்டுள்ளார்.

இவ்வாறு பாய்ந்த பேருந்து நீருள் மூழ்கியதில் அதிலிருந்த 10பெண்கள் 4 குழந்தைகள் உட்பட 60பேர் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து அப்பாதையினூடான போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மலைப் பாதையூடான பயணம் ஆபத்து மிகுந்ததாக இருப்பதனால் இப்பாதையால் பயணிக்கும் வாகனங்களின வேக எல்லை குறித்து இறுக்கமான வரம்புகள் போடப்பட்டுள்ள போதிலும் சாரதிகளின் கவனயீனத்தால் அடிக்கடி இதில் விபத்துகள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)



தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையில் பெய்த மழையால் கடந்த 4 வருடமாக நிரம்பாத முருகன் கோவில் தெப்பக்குளத்தில் மேல்மட்டம் வரை தண்ணீர் நிறைந்திருப்பதையும், குளங்கள், கால்வாய்கள் நிறைந்து பொதுமக்கள் இருக்கும் குடிசைப் பகுதிக்குள் வெள்ளம் புகுந்து வருவதையும் படத்தில் காணலாம்.

# க.பொ.த (சாதாரண தரம்)

# மாதிரிப் பரீட்சை-2004

# சமூகக்கல்வியும் வரலாறும்

ஆக்கம்: திரு.S.P.சர்மா B.A Geo.Sp
பிரதி அதிபர், யாழ்.கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.


நேரம்: 3மணி

## பகுதி - II

**1ஆம் வினாவின் அ, ஆ பிரிவுகளுக்கும் வேறு ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** அ) தரப்பட்ட 1:50,000 தேசப்படப் பகுதியினை அவதானித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1). தேசப்படத்தில் 1,2,3,4,5,6 எனக் காட்டப்பட்டுள்ள இடங்களில் காணப்படும் அம்சங்கள் யாவை என்பதைக் கீழே தரப்பட்டவற்றிலிருந்து தெரிவு செய்க.




i. குடா, முனை, களப்பு
ii. தீவு, குடா, முனை
iii. குத்துச்சாய்வு, பாறைத்தொடர், தனிக் குன்று
iv. சுவடு, பள்ளத்தாக்கு, கணவாய்.
v. சுவடு, பள்ளத்தாக்கு, பாறைத்தொடர்
vi. கிளையாறு, நீர்ப்பாசனக்கால்வாய், புகையிரதப் பாதை (6புள்ளி)


2). அ) பிரதான வீதி ஓரமாகவுள்ள மைல்கல்லின் துணையுடன் பிரதான வீதியின் நீளத்தைத் தருக?
ஆ) இப்பிரதேசத்திலுள்ள பெர்துக கட்டிடங்கள் 3தருக?
இ) நீர்ப்பாசனக கால்வாய்களின் மொத்த நீளம் எவ்வளவு?
ஈ) இப்பிரதேசத்தின் சாய்வு எத்திசை நோக்கிக் காணப்படுகிறது? (8புள்ளி)

3). அ) இப்பிரதேசத்திலுள்ள மக்களின் தொழில் நடவடிக்கை யாது?
ஆ) இப்பிரதேசத்தை விருத்தி செய்ய எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் 2 தருக? (4புள்ளி)

ஆ) 1. கண்டி இராச்சியத்தின் சிங்களப் பரம்பரையின் இறுதி மன்னன் ..........
2. சிறீ சிங்களாதீஸ்வர என்னும் பட்டத்தை பயன்படுத்திய மன்னன் ............
3. ஒல்லாந்தர் கரையோரத்தை ஆட்சிசெய்தபோது மலையகத்தை ஆட்சி செய்த மன்னன் ................................
4. 1ம் விமலதர்மசூரியனால் கட்டப்பட்ட விகாரை ..................
5. தந்துறே போர் நடைபெற்ற ஆண்டு .............................
6. அமெரிக்க சுதந்திரப்போரின் சுலோகம் ..............................
7. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் .............................
8. மாளிகாகந்த பிரிவேனாவை அமைத்தவர்.......................
9. சித்திலெப்பை உருவாக்கிய சாகிராக் கல்லூரி அமைந்துள்ள இடம்..........
10. பாரிய குளங்கள் அமைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த மன்னன்........
11. இரட்டை ஆட்சி நடைபெற்ற காலப்பகுதி ................
12. இலங்கையின் முதலாவது சிங்களப் பத்திரிகை ............ (12புள்ளி)

**02.** 1. மருத்துவத் தொழில்நுட்பம் பண்டைக்காலத்தில் விருத்தியடைந்திருந்தமைக்கு ஆதாரமாக மருத்துவத்துறைக்குப் பங்காற்றிய மூன்று மன்னர்களை கீழே உள்ள மன்னர்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
(1ம் அக்போ, செனரத், 1ம் புவனேகபாகு, வலகம்பா, புத்ததாசன், 8ம் பராக்கிரமபாகு, 1ம் பராக்கிரமபாகு) (3 புள்ளி)
2. ஆரியர்களின் ஆரம்பக் குடியேற்றங்கள் வரண்ட வலயத்தில் அதிகளவு அமைக்கப்பட்டமைக்குரிய இரு காரணிகளைத் தருக? (4புள்ளி)
3. இலங்கையின் செதுக்கல்கலை தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தக் கூடிய இரு உதாரணங்கள் தந்து அதன் சிறப்புக்களை விளக்குக? (5புள்ளி)
4. நீர்ப்பாசன நடவடிக்கைகளில் புராதன மக்கள் சிறந்த தொழிநுட்ப அறிவு கொண்டிருந்தனர் என்பதனை இரு உதாரணங்கள் தந்து விளக்குக? (6 புள்ளி)

**03.**




1. மேலுள்ள படத்தில் **A,B,C**யினால் காட்டப்பட்டுள்ள புராதன துறைமுகங்கள் யாவை? (3 புள்ளி)
2. பண்டைக்காலத்தில் இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புக்கு சாதகமாக அமைந்த நான்கு காரணிகளைத் தருக? (4 புள்ளி)
3. இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட "இந்திய முற்றுகைகள்" நான்கினையும், இம் முற்றுகைகள் யாருடைய காலத்தில் மேற்கொள்ளப்பட்டன என்பதனையும் தருக? (5 புள்ளி)
4. இலங்கை புராதனகாலத்தில் தொடர்புகொண்டிருந்த இரு கீழைத்தேச நாடுகளையும், இரு மேலைத்தேச நாடுகளையும் குறிப்பிட்டு அந்நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளை விளக்குக? (6புள்ளி)

**04.** 1. மலையக இராச்சியத்திற்குப் பாதுகாப்பாகக் காணப்பட்ட அரண்கள் யாவை? (3புள்ளி)
2. மலையக இராச்சியப் பொருளாதாரம் தன்னிறைவை அடிப்படையாகக் கொண்டிருந்ததென்பதற்கு ஆதாரமாக 3 உதாரணங்கள் தருக? (4 புள்ளி)
3. 1ம் விமலதர்மசூரியன் மலையகத்தை கட்டியெழுப்புவதில் வகித்த பங்கினை விபரிக்குக? (5 புள்ளி)
4. 1766ல் மலையக மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை விளக்குக? (6 புள்ளி)

**05.** 1. பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கலகங்கள் மூன்று தருக? (3புள்ளி)
2. 1815ல் பிரித்தானியர் மலையக இராச்சியத்தை இலகுவில் கைப்பற்ற சாதகமாக அமைந்த இரு காரணிகளை எழுதுக? (4புள்ளி)
3. 1833ல் இருந்து சுதந்திரம் பெறும் வரை கொண்டுவரப்பட்ட யாப்புகள், சீர்திருத்தங்களை ஒழுங்குமுறைப்படி தருக? (5புள்ளி)
4. டொனமூர் யூாப்பு இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இதன் முக்கிய அம்சங்களைக் கூறி விளக்குக? (6புள்ளி)

**06.** 1. கிராமிய விவசாயத்தை விருத்திசெய்யப் பங்காற்றிய பிரித்தானிய ஆளுநர்கள் மூவர் தருக? (3புள்ளி)
2. பிரித்தானியரால் அறிமுகம் செய்யப்பட்ட கோப்பிப் பயிர்ச்செய்கை மிகக் குறுகிய காலத்தில் விருத்தியடைந்தமைக்குரிய 4 காரணிகள் தருக? (4புள்ளி)
3. பௌத்த, இந்து, இஸ்லாம் மத மறுமலர்ச்சிக்குப் பங்காற்றியோரில் ஒவ்வொருவரைக் குறிப்பிட்டு அவர்களின் இரு பங்களிப்புக்களைத் தருக? (5புள்ளி)
4. பிரித்தானியர் காலத்தில் கொழும்பிற்கும் ஏனைய இடங்களிற்கும் பெருந்தெருக்களை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணிகளைக் கூறி விளக்குக? (6புள்ளி)

**07.** **மனித அபிவிருத்திச் சுட்டி, ஆள்வீத தேசிய உற்பத்தி, மனித சுதந்திரச் சுட்டி, தனிநபர் சக்தி நுகர்வு, ஆள்வீத தேசிய உற்பத்திவிருத்த' வேகம், பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டி, செல்மதி நிலுவையின் உடன்பாடான எதிர்மாறான தன்மை.**
1. மேலே குறிப்பிட்டவற்றில் மரபுவழி அபிவிருத்தி அளவீட்டு முறைகள் மூன்று தருக? (3புள்ளி)
2. அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குரிய பண்புகள் 3ஐ ஒவ்வோர் பிரிவுக்கும் பொருத்தமாக எழுதுக? (4புள்ளி)
3. தொடர்பாடலை மையமாகக்கொண்டு அண்மைக்காலத்தில் இலங்கையில் விருத்தி செய்யப்பட்ட ஊடகம் நான்கு தருக? (5புள்ளி)
4. உமது பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று செயற்திட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றின் நோக்கம், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் அதன் பங்கு பற்றி விளக்குக? (6புள்ளி)

**08.** 1. ஜேர்மனி, பிலிப்பைன்ஸ், ஈரான் ஆகிய நாடுகளில் இன்று பயன்படுத்தப்படும் நாணயங்கள் யாவை? (3புள்ளி)
2. சர்வதேச வர்த்தகம் பண்டைக்காலத்தல் முக்கியம் பெற்றிராமைக்குரிய காரணிகள் 4 தருக? (4புள்ளி)
3. சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் 4 தருக? (5புள்ளி)
4. இலங்கை போன்ற அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு வெளிநாட்டு உதவி ஏன் அவசியம் என்பதனை 2 காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக? (6புள்ளி)

**09.** 1. உலகில் அகதிகள் பிரச்சினை அதிகளவு காணப்படும் 3 நாடுகள் தருக? (3புள்ளி)
2. அகதிகள் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமான அடிப்படை அம்சங்கள் 5 தருக? (4புள்ளி)
3. ஐ.நா.பாதுகாப்பு சபையின் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளையும் வீட்டோ அதிகாரத்தையும் விபரிக்குக. (5புள்ளி)
4. உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு உருவாக்கப்பட்ட தாபனத்தின் சமாதானத்திற்கான பங்களிப்புக்கள் இரண்டினைக் கூறி விளக்குக? (6புள்ளி)

**10.** 1. ஜனநாயகம் பற்றிய கருத்து வெளியிட்ட 3 அறிஞர்களைத் தருக? (3புள்ளி)
2. இலங்கை 1978 அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதியின் நீதிமன்ற அதிகாரங்கள் 4 தருக? (4புள்ளி)
3. இலங்கை பாராளுமன்றத்தில் இன்று சட்டமூலங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதை விபரிக்குக? (5புள்ளி)
4. மக்கள் பிரதிநிதிகள் தமது மக்களுக்கு சேவையாற்றக் கடமைப்பட்டவர்கள் என்பதனை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக? (6புள்ளி)

## சமூகக்கல்வியும் வரலாறும்

### பகுதி I இன் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.1 | 02.3 | 03.3 | 04.3 | 05.3 | 06.1 | 07.3 | 08.1 | 09.1 | 10.1 |
| 11.2 | 12.2 | 13.3 | 14.1 | 15.3 | 16.4 | 17.4 | 18.3 | 19.2 | 20.1 |
| 21.3 | 22.4 | 23.4 | 24.2 | 25.2 | 26.1 | 27.2 | 28.3 | 29.4 | 30.3 |
| 31.2 | 32.3 | 33.4 | 34.1 | 35.3 | 36.3 | 37.4 | 38.3 | 39.3 | 40.1 |

**க.பொ.த (சா/த) மாணவர்களே!**
சைவசமயம் பகுதி I, பகுதி II வினாத்தாள்கள் நாளை வெளிவரும்.
தொடர்ந்து பரீட்சை வினாத்தாள்களை உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.

## த.தே.கூட்டமைப்பு எம்.பிக்களால் திருமலையில் விழிப்புணர்வு பிரசாரம்

(திருகோணமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினாகள் தற போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினா இரா.சம் பந்தன் தலைமையில் 18 பாராளு மன்ற உறுப்பினாகள் இந்த நட வடிக் கையில் நேற்று முன் தினம் முதல் ஈடுபட்டுள்ளார்கள்.

ஏனைய 4 பாராளுமன்ற உறுப்பினா களும் தற்போது வெளிநாட்டில் தங்கியிருப்பதால் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிலலை. நேற்று முன்தினம் திரு கோணமலை மவட் டத்திலுள்ள பல்வேறு தரப்பு பிரதி நிதிகளை நகர மண்டபத்தில்சந்தித்து கருத்துக்களை பரிமாறிக் கொணட இவர்கள் தனியார் விடுதி யொன் றில் சட்டத்தரணி ஓ.எஸ். எம்.இஸ் மாயில் தலைமையிலான முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவையும் சந்தித்து தமிழ்-முஸ்லிம் உறவு, விடு தலைப்புலிகளினால் முன்வைக்கப் பட்டுளள தன்னாட்சியுள்ள இடைக் கால நிர்வாக யோசனை போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளித் தனர்.

நேற்று திருகோணமலைத் தொகு தியிலுள்ள தமிழ் கிராமங்களுக்கு சென்று மக்களை சந்தித்து விழிப் பூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இவர்கள் மூதூர் மற்றும் சேருவில தொகுதியிலுள்ள தமிழ்க் கிராமங் களுக்கும் சென்று விழிப்பூட்டல் நட வடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்களின் சில முக்கிய சந் திப்புகளில் விடுதலைப் புலிகளின மாவட்ட அரசியல் துறை பொறுப் பாளா எழிலனும் கலந்து கொண் டார். (க)

## காதல் திருமணம் கசத்தது கான்ஸ்டபிள் தற்கொலை!

(நீர்கொழும்பு)

நர்கொழும்பு தலுபொத்த எனு மிடத்தில் பொலிஸ் கான்ஸ் டபி ளொருவா மனைவி, மாமி உட்பட 5 பேரை சுட்டுக் கொன்ற பின்பு தனக் குததானே சுட்டு தற்கொலை செய் துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கொல் லப்பட்ட அனைவரும் அவரது உறவினர்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் மற்றுமொருவர் காய மடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலை யத்தில் பணியாற்றும் எம்.தில கரத்ன என்ற இந்த கான்ஸ்டபிள் சில மாதங்களுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டவர் என்றும், நேற்று முன்தினம் இரவு கடமையிலிருந்த இவர்,அதிகாரி களுக்கு தெரியாமல் ரி-56 ரக துப் பாக்கியுடன் வீட்டிற்குச் சென்று இக் கொலைகளை செய்து விட்டு, வீட்டுக்கு வெளியே வந்து வீதியில் வைதது தனக்குத்தானே சுட்டு தற் கொலை செய்துள்ளார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-121)


### அன்பு மாணவர்களே!

# நவராத்திரி பூசை

### நடைபெற்று வருவதையொட்டி

# 'கவிதை மாலை'

பகுதியை வலம்புரி தொடர்ந்தும் வெளியிடுகின்றது. மாணவர் களாகிய உங்களின் கவிதையும் இடம்பெறவேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கறகும் தரம், மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

"வலம்புரி"

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:* கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ-ர்)



# விவாத அரங்கு - 6

விடயம்

மதமாற்றத் தடைச் சட்டம்

தேவையானதா?

தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு

வலம்புரி

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.


# செய்தித் துளிகள்

## போட்டி

(பொன்னாலை)

உடுவில் இந்து இளைஞர் மன் றம் வாணிவிழாவை முன்னிட்டு பாலர் பாடசாலை மாணவர்களி டையே பல போட்டிகளை நடாத்த வுள்ளது.

பேச்சுப்போட்டி, திருக்குறள் போட்டி,ஆத்திசூடி, கொன்றைவேந் தன், மனனப்போட்டி, பண்ணிசைப் போட்டி என்பவற்றை நடாத்தி இம் முறை நவராத்திரி விழாவை சிறப் பாகக் கொண்டாடவுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றியீட் டிய மாணவர்களுக்கு நாவலர் விழா வில் வைத்து பரிசில்கள் வழங்கப் படும் எனஅறிவித்துள்ளது.(க-49)

## கணனி வகுப்பு ஆரம்பம்

(பொன்னாலை)

விஜயதசமி தினமான எதிர் வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை தென்மராட்சி - மக்கள் நலன் பேர வைச் சங்கம் இலவச விசேட ஆங்கில, கணனி வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது.

சாவகச்சேரி- நவீன சந்தை மேல் மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள தமது காரியாலயத்தில் இவ் வகுப் புக்கள் காலை 9.00 மணிக்கு கல்வித்துறை சார்ந்த பெரியோர் களால் ஆரம்பித்து வைக்கப்பட வுள்ளன. (க-49)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தின் ஏற் பாட்டில் யாழ். கல்வி வலயத் திற்குட்பட்ட பாடசாலைகளில் கல் விப் பொதுத்தராதர உயர்தர வகுப் புகளில் ஆசிரியர்களுக்கு கணிப் பீட்டுப்படிவங்கள் மற்றும் மாண வர் பதிவேடுகள் ஆகியன குறித்து விளக்கமளிக்கும் கூட்டமொன்று யாழ். கல்வி வலய முகாமைத் துவ மண்டபத்தில் நாளை புதன் கிழமை பி.ப.3.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பாடசாலை களில் இருந்து கணித,விஞ்ஞான பாட இணைப்பாளர் ஒருவரையும் கலை,வர்த்தகபாட இணைப்பாளர் ஒருவரையும் தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறு யாழ். கல்வி வலய உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ற-5)

## வாணிவிழா நிகழ்வு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் வாணி விழா நாளை புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இதில் கூட்டுப்பிரார்த்தனை, சரஸ் வதி பாமாலை ஓதல் மற்றும் பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள் ளன. (க)

## பட்டமளிப்பு விழா

(புத்தளம்)

புத்தளம் ரவ்ழதுல் ஹாபிலீன் மத்ரஸாவின் 2ஆவது ஹாபிழ் பட்டமளிப்பு விழா கடந்த 11ஆம் திகதி புத்தளம் மொஹிதீன் ஜும் ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

மத்ரஸாவின் முதல்வர் அல்-ஹாபில்,காரி ஏ.எம்.எம். றியாஸ் (தேவ்பந்தி) தலைமையில் நடை பெற்ற நிகழ்வில்,திருச்சி ஜாமிஆ அன்வாறுல் உலூம் அறபுக் கல் லூரி துணைமுதல்வர் முப்த்தி காரி, ஏ.எஸ்.றூஹுல் ஹக் ஹழ் ரத் பிரபல பேச்சாளாராக அஷ் ஷைக்கலீல் அஹ்மத்(கீரனூரி) (திண்டுக்கல் தாருல் உலூம் யூசு பிய்யாஹ் அறபுக் கல்லூரி முதல் வர்) உட்பட உலமாக்கல் அமைப் புக்களின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

அல்-குர்ஆனை மனனம் செய்த ஏழு ஹாபிழ்கள் பட்டம் பெற்றனர். அல்-ஹாபிழ் ஏ.ஜீ.எம். ஸமீல் (கண்டல்குழி), ஏ.சீ.எம்.அர்ஷத் (ஆலங்குடா),எம்.ஏ.எம். இம்ரான் (திகழி),எம்.எவ்.எம். ஷிஹான் (கப் பலடி), டி.எம்.நப்ரீஸ் (கொய்யவாடி), ஏ.ஆர்.எம்.ஷிப்றான் (கண்டல்குழி), ஜே.ஏ.எம். முன்தஸிர் (திருகோண மலை) ஆகியோர் இங்கு பட்டம் பெற் றமை குறிப்பிடத்தக்கது. (க-15)

## கருத்தரங்குகள்

(மருதங்கேணி)

யாழ். மாவட்டத்தில் மாணவர் களின் கணித, தமிழ் மற்றும் ஆங் கிலப் பாடம் சம்பந்தமான அறி வினை மேம்படுத்துவதற்கான நட வடிககையில் ஐக்கிய நாடுகளின சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) ஈடுபட்டுள்ளது.

இந்த அடிப்படையில் யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 9முதல் 11 வரையிலான வகுப்புக் களில் கற்றுவரும் மாணவர் களுக்கு கணிதம், தமிழ், ஆங் கில வகுப்புக்களையும் கருத்தரங்கு களையும் யுனிசெப நடத்தி வருகின் றது.

இந் நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வல யங்களிலும் சிறப்பாக முன்னெடுக் கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக் கப்படுகிறது. (க-35)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாதாந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை 11 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட திணைக் கள அதிகாரிகளையும் கிராம சேவை அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரை யும் கலந்து கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது. (க-35)

## *போதைப்பொருள் கடத்திய 2 வயோதிபர்கள் கைது*

(கொழும்பு)

பாகிஸ்தான் நாட்டிலிருந்து ஹெரோயின் போதைப்பொருளை இலங்கைக்கு கடத்தி வந்த இரண்டு நபர்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றத்தடுப்புப் பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் 100ற்கும் அதிகமான ஹெரோயின் பொதி செயயப்பட்ட உருண்டைகளை விழுங்கி கடத்தி வந்ததாகக் கட்டு நாயக்க விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்த னர்.

கடத்தி வந்த இருவரும் வயோ திபர்களாவர். ஹெரோயின் போதைப் பொருளை வெளியே எடுப்பதற் காக இருவரும் நீர்கொழும்பு வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர். (க-8)

## விண்ணப்பம் கோரல்

(காரைநகர்)

காரைநகர் மாணிக்கவாசகர் சபை காரைநகர் பிரதேச மட்டத் தில்சைவசமய வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் நடாத்தி வரும் பாடசாலை மட்டத்திலான சைவ சமயப் பரீட்சைக்கான விண்ணப் பங்கள் தற்போது கோரப்பட்டுள்ள தாக மணிக்கவாசகர் சபையின் பரீட்சை செயலர் க. தில்லையம பலம் தெரிவித்தார். (ற)

## மைதானத்தை பயன்படுத்தலாம்

சாவகச்சேரி நகரில் உள்ள பொது விளையாட்டு மைதானம் இதுவரை காலமும் பாதுகாப்புப் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்துள்ளதால் இம் மைதானத்தைப் பார்வையிடு வதற்கு கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி படையினர் அனுமதி வழங்கினர்.

இருந்தும் மைதானத்தைச் சூழ காவலரண்கள் இருப்பதால் இது வரை காலமும் மைதானத்தைப் பயன்படுத்தவில்லை எனக் கூறி யதை அடுத்து எந்தவிதமான அச் சுறுத்தல்களும் இன்றி எந்நேரமும் இவ் விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தலாம் என 521 படைப் பிரிவின் அதிகாரி கோமாடயஸ், சாவகச்சேரி நகரசபை செயலா ளரிடம் உறுதிபட தெரிவித்திருக் கின்றார். எனவே இந்த பொது விளையாட்டு மைதானத்தை பொதுமக்கள் பாவிக்கலாம என சாவகச்சேரி நகரசபையின செய லாளர் தெரிவித்துள்ளார். (க-127.29)

## *உழவு இயந்திரங்களை பெற்றுத்தருமாறு கோரிக்கை*

(இணுவில்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக் குப்பட்ட இடங்களைத் துப்பரவு செய் யவும், கூடவே கழிவுக் குப்பை களை அகற்றவும் மேலும் சில உழவு இயந்திரங்களைப் பெற்றுத் தருமாறு மாநகரசபை ஆணை யாளர் கலாநிதி க.குணராசா அர சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது உள்ள வாகனங்கள் யாழில் உள்ள கழிவுகளை அகற்ற போதவில்லை என்றும் கூடுதலான வாகன வசதி இருக்குமாயின் தின மும அகற்றி யாழ். நகரையும் சுற் றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைத் திருக்க முடியும் என ஆணையா ளர் தெரிவிக்கின்றார். (க-122)

## புதிய சந்தை திறப்பு

(கோண்டாவில்)

கல்வியங்காடு செங்குந்தா வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தை, கடந்த 15ஆம் திகதி யாழ். மாநகர சபை ஆணையாளர் க.குண ராசாவினால் திறந்து வைக்கப் பட்டது.

இப்புதிய சந்தையை அமைப் பதற்கு முன்னாள் மாநகர சபை முதல்வாகளான என். ரவிராஜ், செல்லன் கந்தையன் மற்றும் முன் னாள் மாநகர சபை ஆணையாளர் இராமலிங்கம் ஆகியோரும் தம் மாலான உதவிகளை வழங்கி யதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-130)

## யோகாசனப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்றமும் அறநெறிப் பாடசாலையும் இணைந்து யோகா சனப் பயிற்சி வகுப்பொன்றை நடாத்த வுள்ளது.

இந்தியாவின் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஆசிரியர் ம. நேசராசா இப்பயிற் சியை வழங்கவுள்ளார்.

இப்பயிற்சி நெறியில் ஆசனம், பிராணயாமம, கிரியா முத்திரா, தியா னம் என்பன மூன்று மாதத்திற் கும், நோயாளர்களுக்கு விசேட பயிற்சியும், மாணவர்களின் ஞாபக சக்தியை மேம்படுத்தும் பயிற்சி என் பன மூன்று மாதங்களிறகு வழங் கப்பட்டு பயிற்சி முடித்தவர்கட்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளமை இங்கு குறிபிடத்தக்கது. (க-130)

## மோட்டார்களுக்கு இறக்குமதித் தீர்வை

(கொழும்பு)

மோட்டார்கார்கள், வான்கள் ஆகியவற்றுக்கான இறக்குமதித் தீர்வைகள் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் மோட்டார் சைக்கிள் கள், முச்சக்கரவண்டிகள் மற்றும் பயணிகளையும் பொருட்களை யும் ஏற்றிச் செல்லும் வாகனங் களுக்கும், பெற்றோல் வாகனங் களுக்கும் இத்தீர்வை விதிக்கப் படமாட்டாது என்று நிதியமைச் சர் கலாநிதி சரத் அமுனுகம தெரி வித்துள்ளார்.

பழைய வாகனங்களை கொள் வனவு செய்பவர்களுக்கும் இத் தீர்வை விதிக்கப்படமாட்டாது என் றும் அமைச்சர் அமுனுகம தெரி வித் துள்ளார். (ம)

## உப்பிற்கு எவ்வித தட்டுப்பாடுமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உப்பிற்கு தட்டுப்பாடு எதுவுமில்லை யென வும் மக்களுக்குத் தேவையான உப்பினை ஆணையிறவு உப்பு உற்பத்திப் பேட்டையில் இருந்து தருவிக்கப்பட்டு, யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்க சமாசத்தில களஞ்சியப்படுத்தி, அவ் வபபகுதிகளில் உள்ள ப.நோ.கூ. சங் கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளதாகவும் சமாசத் தலைவர்ப.கன கலிங்கம் அறிவித்துள்ளார்.(க)

## இந்திய - அவுஸ்திரேலிய முதல் டெஸ்ட்

# மழையால் இரு அணிகளும் ஏமாற்றம்

# வெற்றி தோல்வியின்றி போட்டி முடிவு

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்ற இந்திய-அவுஸ்திரேலிய




அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி துரதிஷ்டவசமாக வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இரு அணிக்கும் வெற்றி அல்லது தோல்வியை இறுதிநாள் ஆட்டம் நிர்ணயிக்கும் என அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த வேளை, நேற்று முன்தினம் இரவு பெய்த கடும்மழை காரணமாக ஐந்தாம் நாள் ஆட்டம் கைவிடப்பட்ட நிலையில் இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிஙஸில் 235, இந்தியா முதல் இன்னிங்ஸில் 376. அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்ஸில் யாரும் எதிர்பாராதவாறு 369 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டத்தின்போது ஆட்டமிழக்காதிருந்த டேமியன் மாட்டினும கில்லெஸ்பியும் 5ஆவது விக்கெற்றுக்காக மிகவும் பொறுப்புடனும், கவனத்துடனும் விளையாடி 139 ஓட்டங்களைப் பெற்றனர். இந்திய அணியின் அனைத்துப் பந்து வீச்சாளர்களையும் திறமையாகச் சமாளித்து அவர்கள் இந்த ஓட்டங்களைப் பெற்றனர். இதில் டேமியன் மாட்டின் இந்தியாவுக்கு எதிராக தனது முதலாவது டெஸ்ட் சதத்தையும், டெஸ்ட் போட்டிகளில் எட்டாவது சதத்தையும் பெற்றமை முக்கியமானது.

அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 369



ஓட்டஙகளைட் பெற்றது. கில்லெஸ்பி 26 ஓட்டங்களுடனும், மாட்டின் 104 ஓட்டங்களுடனும் ஒரே ஓவரில் ஹர்பஜன்சிங்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். இந்திய அணியினால் பல பிடிகள் நழுவ விடப்பட்டமை அவுஸ்திரேலிய அணிக்கு சாதகமாக அமைந்தது. லேமன்-31, வோர்ன-0, காஸ்பரோவிஸ்-5 மெக்ராத்-2. மைக்கல் கிளார்க் மிகச் சிறப்பாக விளையாடி ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப்பெற்றிருந்தார்.

பந்து வீச்சில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே நேறறு முன்தினம் தனது 34ஆவது பிறந்த நாளில் 13 விக்கெற்றுக்களை ஒரு டெஸ்ட் போட்டியில் பெற்று சாதனை படைத்தார். ஐந்து விக்கெற்றுகது மேல் பெற்றது 26 ஆவது தடவையான இப் போட்டியில் அதிக விக்கெற்றுக்களைப் பெற்றவர்கள் பட்டியலில் ஏழாவது இடத்துக்கும் முன்னேறியுள்ளார். அவர் மொதததம் 415 விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார்.



தொடர்நது தனது இரண்டாவது இனனிங்சை விளையாடிய இந்திய அணி ஆட்டநேர முடிவில் 3 ஓவர்



களில் விக்கெற் இழப்பின்றி 19 ஓட்டங்களைப் பெற்றது. யுவராஜ் சிங் 7 ஓட்டங்களையும் ஷேவாக் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

229 ஓட்டங்கள் பெற்று வெற்றி பெற நினைத்த இந்திய அணியின் எண்ணத்தை நேற்று முன்தினம் பெய்த மழை வீணாக்கிவிட்டது.

ஐந்தாம் நாள் ஆட்டம் நடைபெற முடியாத நிலையில் போட்டி வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக 13 விக்கெற்றுக்களை பெற்ற அனில் கும்ளே தெரிவுசெய்யப்பட்டார்.

அவருக்குப் பரிசாக வெற்றிக் கிணணமும், 35ஆயிரம் ரூபா (இந்திய) பணப்பரிசும், **T.V.S.** மோட்டார் சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டன. (க-7)

### மூன்றாவது டெஸ்டிலும் பொன்டிங் விளையாடார்

அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாட மாட்டாரென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கைவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாக முதல் இரு போட்டிகளிலும் பங்குபற்றாத பொன்டிங், மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவார் என எதிர்பாக்கப்பட்ட போதிலும் அவரது காயம் போட்டியில் விளையாடக்கூடிய அளவிற்குக் குணமாகவில்லை என்பது அண்மையில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே படம் மூலம் தெரியவந்துள்ளது.

பொன்டிங் இதுபற்றிக் கூறும் போது விரைவில் விசேட மருத்துவரிடம் ஆலோசனை பெறவுள்ளதாகவும், மும்பாயில் நடைபெறவுள்ள நான்காவது டெஸ்டில் தான் விளையாட முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார். (க-7)

### புங்குடுதீவு மகா வித்தியாலயம் இறுதிப் போட்டிக்கு தெரிவு

தீவக வலய பாடசாலைகளிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் 16வயது ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் பாடசாலைக்கும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கும் இடையேயான போட்டியில் 1-0என்ற கோல்கணக்கில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது. 14வயது ஆண்கள் பிரிவில் காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயத்திற்கும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கும் இடையேயான போடடியில் 4-0 என்ற கோல்கணக்கில் புஙகுடுதீவு மகாவித்தியாலயம் வெற்றிபெற்றது.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் 16 வயது ஆண்கள் பிரிவில் நயினாதீவு கணேசா மகாவித்தியாலயமும் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் மோதின. 14வயது பிரிவில் ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் வித்தியாலயமும், புங்குடுதீவு மகா வித்தியாலயமும் மோதின. (ப-7,126)

# இலங்கைக்கு எதிரான பாகிஸ்தான் அணி அறிவிப்பு


பாக்டெல் கிணணத்தைக் கைப்பற்றிய இலங்கையணியுடனான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான பாகிஸ்தான் அணி விபரம் அறிவிக்கப்பட்டுளளது. முதலாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாக இருக்கிறது.

இவ்வணியில் அறிமுக வீரர்களாக 19 வயதுடைய வேகப்பந்து வீச்சாளர் நியாஸ் அவ்ரிடியும், விக்கெற் காப்பாளர் மொயின் காணைப் போன்ற திறமை மிக்கவரான சுல்கார் மொயின்ஹைடரும் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தார், முஹமட் சமி, நவீட்-உல்-ஹஸன், அப்துல் ரஸாக் போன்ற 4 வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ள போதிலும் ஐந்தாவது வேகப்பந்து வீச்சாளராகவே பத்தொன்பது வயதுடைய அறிமுக வீரர் றியாஸ் அவ்ரிடி இணைக்கப்பட்டுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அணி விபரம் வருமாறு,

யஸீர ஹமீட், இம்ரான் ப்ஹாட், ஆசிம் கமால், இன்சமாம்-உல்-ஹக் (அணித்தலைவர்), யூசுப் யுகானா யூனிஸ்கான், அப்துல ரஸாக், சொகைப் மாலிக், சொகைப் அக்தார், முஹமட் சமி, றியாஸ் அவ்ரிடி, டேனிஷ் கனேரியா, சுல்கார்மொயின் ஹைய்டர், றமதுல் ஹஸன் மற்றும் மொயின் கான் ஆகியோர். (ப-7,121)

**விளையாட்டு செய்திகள்**



வியட்னாமில் நடந்து வரும் சர்வதேச டென்னிஸ் தொடரில், ஆர்ஜென்டினாவின் கில்லர்மோகேனஸ் 6-4, 2-6, 6-3 என்ற செட்களில் சக வீரரான டேவிட் நல்பாந்தியனை வீழ்த்தினார். இதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேறிய மகிழ்ச்சியில் கேனஸ்.

## பரிதாபத்திற்குரிய விபசாரிகள் பொலிஸாரிடம் தோற்றனர்

விபசாரிகளின் அவலத்தை வெளிப்படுத்த பொலிஸாருடன் நடந்த கால்பந்து போட்டியில் விபசாரிகள் அணி 3:1 என்ற கோல் கணக்கில் பரிதாபமாக தோற்றது கௌத்தமாலா நாட்டில் விபசாரம் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாக நடக்கிறது. இருந்தாலும் குறைநத வருமானம், பொலிஸாரின் தொந்தரவு உட்பட பல அவலங்கள் அவர்களுக்கு உள்ளன. இதை வெளிப்படுத்த விபசாரிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே கால்பந்து போட்டி நடத்தப்பட்டது. அதைக்காண ஏராளமான ரசிகர்கள் திரண்டனர். பொலிஸ் அணி மூன்று கோல போட்டது. ஒரே ஒருகோல் போட விபசாரிகள் அணி பரிதாபமாக தோற்றது.

விபசாரிகளின் அணியில் கோல் போட்ட 27வயது வலேரியா கூறுகையில், 'எங்கள் முகம் பகிரங்கமாக இப்போது வெளியே தெரிகிறது. இதனால் வாடிக்கையாளர்கள் எளிதில் அடையாளம் கண்டு கொள்வார்கள். வருமானம் அதிகரிக்கும் என நம்புகிறோம். எங்களை பலர் வாழ்த்தி பொலிஸாருடன் நல்லுறவைப்பேண வேண்டும் என்று கூறினர்' என்றார்.

அந்த அணியில் பங்கேற்ற 37வயது பீரிஸ் கூறுகையில், 'ஒரு முறை உறவுக்கு ரூபாய் 100 கூட கிடைப்பதில்லை. அறைக்குள் தனியாக அடைந்து கிடந்த நாங்கள் அணியாக வெளியே வந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. நாங்கள் கூட்டு முயற்சிகளில் ஈடுபட இதுவழிவகுக்கும் என்றார். (ப-7)

# சொகைப் மாலிக்கின் பந்துவீச்சு சர்ச்சைக்குரியதென முறையீடு

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சொகைப் மாலிக்கின் பந்துவீச்சு சர்ச்சைக்குரியது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாக்டெல் கிண்ண இறுதிப்



போட்டியில் கடமையாற்றிய நடுவர்கள், மற்றும் போட்டித் தீர்ப்பாளர்கள் ஆகியோர் சர்வதேச கிரிக்கெற் சம்மேளனத்துக்கு சொகைப் மாலிக்கின் பந்துவீச்சு தொடர்பாக முறையிட்டுள்ளனர்.

இலங்கை அணிக்கெதிராக நடைபெற்ற பாக்டெல் முக்கோணத் தொடர் போட்டி முடிவடைந்ததன் பின்னர் பாகிஸ்தானிய நடுவர் அலின்ராக், அவுஸ்திரேலிய நடுவர் சைமன் ரவுல் மூன்றாவது நடுவராகக் கடமையாற்றிய பாகிஸ்தானைச் சேர்ந்த அஸார்ரவுப் மற்றும் போட்டித தீர்ப்பாளர் யக்குறாவ ஆகியோர் இம்முறைப்பாட்டினைத தெரிவித்துள்ளனர்.

இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி தோல்வியுற்றாலும் சொகைப் மாலிக் 10 ஓவர்கள் பந்து வீசி 56 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெற்றினைக் கப்பற்றியதோடு, போட்டித்தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதினையும் வென்றெடுத்தார்.

அதேவேளையில், அடுத்த ஆறு வார காலப்பகுதிக்குள் பாகிஸ்தானியக் கிரிக்கெற் நிர்வாகம் இதுபற்றிய சரியான அறிக்கையைத் தமக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவரது பந்துவீச்சுப் பாணி சரியான முறையில் மாற்றியமைக்க உதவிசெய்ய வேண்டும் என்றும் சர்வதேச கிரிக்கெற் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இவரது பந்துவீச்சு முறை பற்றிய சரியான அறிக்கையை சர்வதேச கிரிக்கெற் சம்மேளனத்தின சார்பாக பரிசீலனையில் ஈடுபடும் வீரர்களைக் கொண்ட குழுவினர் அறிவிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-7,121)

# நவராத்திரிப் பாமாலை



## இலக்குமி துதி

### இலக்குமியே

பத்து நாள் தவமிருந்து
பத்தினியர் மூவரையும்
பக்தியோடு வழிபட்டு
பயன்கள் பலபெற்றிடுவோம்

வன்னியசிங்கம் சிறிகரன்
க.பொ.த. (உ/த),
ஹாட்லி கல்லூரி.

### நவராத்திரி நங்கையர்

வீரத்தை அள்ளி வழங்கும் துர்க்கையளே
செல்வத்தை வாரி வழங்கும் இலக்குமியே
ஞானத்தை பிழிந்து வழங்கும் கலைமகளே
உம்மை என்றும் போற்றி வணங்கிடுவோம்

பா. சிறீகரன்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

### நலமாய் நாம் வாழ...

நவராத்திரி நடு மூன்று நாளில்
நாம் உன்னை வணங்கிடுவோம்
நலமாய் நாம் வாழ வேண்டும்
நல்ல வரம் தருவாயே

தாரணி
தரம்-8
சுதுமலை சிந்மயபாரதி
வித்தியாலயம்

### நன்மை பல பெற்றிடுவோம்

சக்தியை வழிபடுவோம்
சஞ்சலங்கள் போக்கிடுவாள்
திருமகளை வணங்கிடுவோம்
தினம் செல்வம் தந்திடுவாள்

அருள் அமுதா சக்திதரன்
தரம்-13 கனகரத்தினம் ம.ம.

# சம்பிக்க ரணவக்கவின் பதவி நீக்கத்தால் கட்சிக்குள் குழப்பம்

(கொழும்பு)

சம்பிக்க ரணவக்கவை பொதுச செயலாளர் பதவியிலிருந்து அகற்றுவதென முன்னர் செய்த முடிவை மீள் பரிசீலனை செய்வதற்கென ஜாதிஹெல உறுமயவின் மத்திய குழு மீண்டும் கூடவுள்ளது.

இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்நது, கட்சிக்குள் அதிர்ச்சியும், குழப்பமும் தோன்றியுள்ளன.

இதனையடுத்தே, மீண்டும் கூடடம் ஒன்று நடைபெறவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் வண. கொலன்னாவவே ஸ்ரீ சுமங்களதேரரும் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிட மிருந்து இரண்டு வாகனங்களைப் பெற்றதாக பொதுச் செயலாளராக இருந்த சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியதிலிருந்தே கட்சிக்குள் தகராறு ஆரம்பமாகியிருந்தது.

இந்நெருக்கடியை சுமுகமாகத் தீர்த்து வைக்குமாறு கொலன்னாவே ஸ்ரீ சுமங்கள தேரர் கண்டி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களையும் சந்தித்துக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

# புலிகளின் போராட்டத்தை நாம் ஒருபோதும் கொச்சைப்படுத்தவில்லை

## பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் போராட்டத்தை நாம் ஒரு போதும் கொச்சைப் படுத்தவோ, மலினப்படுத்தவோ இல்லை. மாறாக பேச்சு வார்த்தையின் போது எமது முஸ்லிம் மக்களது அபிலாஷைகள் சம தரப்பாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதையே கேட்கிறோம்.

இவ் வாறு சம்மாந்துறை தாருஸ் ஸலாம் மகாவித்தியாலய முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் குறிப்பிட்டார்.

அதிபர் ஏ.எம். சஷிட் தலைமையில் 6 புலமையாளர்களைப் பாராட்டும் நிகழ்வும், கணனி கற்கை மற்றும் ஆய்வு நிலையங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வும் கடந்த புதனன்று நடைபெற்றது. அங்கு அன்வர் இஸ்மாயில் மேலும் பேசுகையில்,

முஸலிம்களின் விடுதலைக்கான இலட்சியப் பயணத்தை சிறப்பாக ஆரம்பித்த ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ்,இன்று திசை மாறிச் சென்று கொண்டிருக்கிறது.

இதனால், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு கேள்விக குறியாகி வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

அப்பாவித் தமிழர்களும் முஸ்லிம்களும் அநியாயமாகக் கொல்லப்படுகின்றார்கள். இந் நிலையில இதைத் தடுத்து நிறுத்த எவரும் முன் வரவிலலை. இத்தகைய வன்முறைகளுககு பின்னணியாக இருப்பவர்களை கண்டு படிபபதில் எவரும் ஆர்வம் காட்டவில்லை.

குறிப்பாக இந்தப் பொறுப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிறகே அதிகம் இருக்கிறது.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்- அரசுக்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் போது முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் சம தரப்பாக கவனத்தில் கொள்ளப் படவேண்டியதன் அவசியத்தை இருதரப்பினருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரே வலியுறுத்த வேண்டும்.

இவை தவிர நாம் எதையும் எவரிடமும் கேட்கவுமில்லை, எவரையும் விமர்சிக்கவுமில்லை என்றார். (க)

## மட்டு.நகரில் கருணாவுக்கு எதிராக வாசகங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர வீதிகளில் விடுதலைப்புலிகளின் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு எதிரான வாசகங்கள் இனந் தெரியாத நபர்களினால் எழுதப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நள்ளிரவு அல்லது நேற்று அதிகாலை இந்த வாசகங்கள் எழுதப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

தாண்டவன்வெளி, கோட்டை முனை, அரசடி மற்றும் புளியந்தீவு ஆகிய இடங்களில் காணப்படும் இந்த வாசகங்களில்,அவரது புதிய அரசியல் கட்சி தொடர்பாக கண்டனங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அவ் வாச கஙகள் அதில் காணப்படுகின்றது. (க-121)

## பாகிஸ்தானியரின் வயிற்றில் 75 ஹெரோயின் வில்லைகள்!

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு வந்த ஒருவரின் வயிற்றுக்குள் இருந்து 75 ஹெரோயின் வில்லைகள் மீட்கப்பட்டுளளன.

கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நபரின் வயிற்றிலிருந்து மீடகப்பட்ட இந்தக குளிசைகளின் சந்தைப்பெறுமதி 15 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மாதத்தில். ஹெரோயின் கடத்தி வரப் பட்டும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவை சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் வெற்றிகரமாக கைப்பற்றப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

(க-121)










கனடா சிலம்பம் அமைப்பினரின் 'பொங்குதமிழ்' பாடல் இறுவட்டு வெளியீட்டு வைபவம் கடந்த சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது, தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் எழிலன்பன் தலைமையுரை நிகழ்த்துவதையும், தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரை நிகழ்த்துவதையும், மேடையில் முக்கிய பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:சிவசங்கர்)

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து - குறள்

வலம்புரி

## பத்திரிகையாளர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் என்ன?

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நான்காவது ஆண்டு நினைவுநாள் இன்று.

தமிழ்மக்களின் மன உளைச்சலை வெளி உலகிற்கு வெளிப்படுத்திய துணிச்சல்மிகு பத்திரிகையாளனாக நிமலராஜன் உலகத் தகவல் தொடர்பாடலாளர்களால் இனங்காணப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில் தமிழினத்தால் மட்டுமன்றி, பல்லின மக்களாலும் அறியப்பட்ட ஓர் ஊடகவியலாளராக அவர் விளங்குகின்றார்.

அவரை இழந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டது. எனினும் இன்றுபோல் இருக்கின்றது அந்த ஊரடங்கு நேரத்தில் தொலைபேசி வாயிலாக வந்த அவலச்செய்தி.

தமிழினத்தின் அவலத்தை வெளிப்படுத்திய மைக்காகத் தன்னுயிரேயே இழக்கின்ற அளவில் பத்திரிகையாளர்களின் சுதந்திரம் இலங்கையில் இருந்தது; இருக்கின்றது என்ற உண்மையை அமரர் நிமலராஜனின் அகால மரணம் ஊடகவியல் உலகிற்கு உணர்த்தி நின்றது.

அவரின் அகால மரணம் வடபுலத்தில் மட்டுமன்றி இலங்கை பூராகவும் எதிரொலித்தது. குறிப்பாக இனவாதத்திற்கு எதிரான சிந்தையுடைய தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் நிமலராஜனின் படுகொலையை வெளிப்படையாக - வன்மையாகக் கண்டித்தனர்.

இஃது தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஓர் காத்திரமான தாக்கத்தை - விழிப்புணர்வை ஏற்படுத்தியது எனலாம். ஊடகவியலாளர்களின் உயிருக்கு உத்தரவாதம் வேண்டும் என்ற குரல் இலங்கையில் உரத்து ஒலித்தது நிமலராஜனின் படுகொலைக்குப் பின்னரே என்ற உண்மையை, அவரின் நான்காவது ஆண்டு நிறைவில் நினைவுபடுத்துவது சாலவும் பொருத்துடையதாகும்.

பேனாமுனையில் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றவர்களை பேனாமுனைகொண்டு எதிர்க்காமல், துப்பாக்கிகொண்டு எதிர்ப்பது என்பது எதிர்பார்க்கின்ற விளைவுகளை ஒருபோதும் தரமாட்டாது என்ற உண்மை இன்றுவரை உணரப்படாமலே இருக்கின்றது.

இதற்கு ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலைக்குப் பின்னரும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் பட்டியல் நீண்டுசெல்வது சான்றாகும்.

ஆட்சியில் தமது பலத்தைப் பெருக்குவதற்காக, பத்திரிகையாளர்களைப் பந்தாபிடிக்கும் அரசியல்வாதிகள் அவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கவோ அன்றி அவர்களின் தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்கவோ முன்வருவதில்லை.

பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கென பாராளுமன்றத்தில் சட்டவாக்கங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவற்றின் பயன்பாடுகள் எதனையும் ஊடகவியலாளர்கள் அனுபவிக்கவில்லை.

மாறாக இராணுவத்தினராலும், பொலிஸாரினாலும் அடிக்கடி தாக்குதலுக்கு ஆளாகும் நிலையிலேயே அவர்களின் பணி தொடர்கிறது. உலக நாடுகளின் வரலாற்றை நோக்குவோமாயின் அங்கு பத்திரிகையாளர்களின் பணி எத்துணை தூரம் உதவிசெய்துள்ளது என்பதை அறியமுடியும்.

மிகப்பெரும் ஊழல்களையும், ஜனநாயக சீரழிவுகளையும் இனங்கண்டு அம்பலப்படுத்தியவர்கள் பத்திரிகையாளர்கள். தமது உயிரைப் பணயம் வைத்து அவர்கள் ஆற்றிய பணியினால் ஊழல் மோசடிகள் குறைந்தது எனலாம்.

அதேபோல் ஜனநாயகக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் ஜனநாயக அம்சங்கள் உயிர்ப்புடன் உலாவருவதற்கும் பத்திரிகையாளர்களே காரணம் என்றால் அது மிகையன்று.

அத்தகைய பத்திரிகையாளர்களுக்கு இலங்கையில் மட்டும் இருக்கக்கூடிய பாதுகாப்புத்தான் என்ன?

# தேசிய ஆலோசனை சபையின் மூலம் இனப்பிரச்சினைகள் தீர்க்கப்படாது

## இது ஒரு ஏமாற்றுவேலை என்கிறார் விநாயகமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இரு தசாப்தகாலமாக இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் அமைக்கப்பட்டுள்ள தேசிய ஆலோசனை சபை சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு எவ்வித பயனையும் தராது.

இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தேசிய ஆலோசனை சபை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ஆலோசனைசபையின் அமைப்புமுறையானது ஜனாதிபதியின் பதவியை நீடிப்பதற்கும் பாதுகாப்பதற்குமே வழிசமைக்கும் தவிர நாட்டில் அரசியல் தீர்வை உருவாக்காது.

இனப்பிரச்சனைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டுமென்றால் விடுதலைப்புலிகளுடனும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடனும் தான் பேசவேண்டும். ஆனால சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றி ஆராய்வது சம்பந்தமாக ஜனாதிபதியால் அமைககப்பட்ட ஆலோசனை சபையில் அரசாங்கத்தைச் சேர்ந்த கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. பிரதானமாக விளங்கும் எதிர்க்கட்சியே இச் சபையை ஏற்க மறுத்துவிட்டது.

விடுதலைப்புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைககாலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தடையாக நிற்பது மட்டுமல்லாமல் அதற்கு எதிரான நடவடிக்கையிலும் ஈடுபடும் பேரினவாதக் கட்சிகள் அங்கம் வகிக்கும் சமாதான ஆலோசனைச சபையை வைத்துக் கொண்டு சந்திரிகாவால் எதனைச் சாதிக்க முடியும்.

படையில் பேச்சுக்களை நடாத்த எதிர்க்கட்சியின் முழு ஆதரவும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். வரலாற்றிலேயே இடம்பெறாத விடயமாகும்.

இந்த சாதகமான நிலையை பகிஷகரித்து விட்டு விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு தான் என்றும் தயார் என்று பேரளவில் மட்டும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் ஏமாற்றும் செயல் ஆகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவி ஏற்று ஆறு மாதங்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக ஆலோசனை சபை ஒன்றை அமைத்தல் காலத்தினால் கடத்தி வருகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதிக்கு அக்கறை இருக்குமானால் புலிகளின் கோரிக்கையின் படி பேச்சுவார்தையை ஆரம்பித்து அதில் திருப்திகரமான தீர்வினை கொண்டு வருவதுதான் சிறந்தது

தற்போதைய சூழ்நிலையைப் பார்க்கும் போது பேச்சுவார்த்தை மூலம் இனபபிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்ற நிலைக்குத் தமிழ் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில தமிழ் மக்களுக்கு சமாதானத்தின் மீது இருந்த நம்பிக்கை இன்று அற்றுப்போய்விட்டது. புலிகளுடன் குரோதத்தை வளர்த்த இனபபிரச்சினைத் தீர்வை காலம் கடத்துவதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்த நிலையில் சரியோ தவறோ பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிப்பதுதான் மக்களுக்கு திருப்திதரக்கூடிய காரியமாகும என அவர் மேலும் தெரிவித்தார். (ப-121)

# தமிழின போராட்டவரலாற்றை சித்திரிக்கும் "போரும் சமாதானமும்" நூல் வெளிவந்துள்ளது

'போரும், சமாதானமும்' என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன்பாலசிங்கம் எழுதியுள்ள அரசியல் வரலாற்று ஆய்வு நூல் வெளிவந்துள்ளது.

514 பக்கங்களைக் கொண்ட இப்புதிய ஆய்வு நூல் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணயப் போராட்ட வரலாற்றினை ஆழமாகவும், துல்லியமாகவும் எடுத்து விளக்குகின்றது.

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பு முன்னெடுத்த புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சி பற்றிய வரலாற்று ஆய்வுடன், விடுதலைப் புலிகள் கலந்து கொண்ட சமரச முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் பற்றிய விமர்சனக் கண்ணோட்டங்களும் இந் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

போர்க் களத்திலும், சமாதான அரங்கிலும் தமிழரின் உரிமைப் போராட்டத்தினை விடுதலைப்புலிகள் எவ்வாறு முன்னெடுத்துச் சென்றனர் என்பதை 'போரும் சமாதானமும்' என்ற இந்நூலில் அன்ரன்பாலசிங்கம் விரிவாக விளக்கியுள்ளார்.

இதன் முதற்பகுதி தமிழ்த் தேசியத்தின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வையை முன்வைக்கின்றது.

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்களும், அவற்றுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட அமைதி வழி அரசியல் போராட்டங்களும் எவ்விதம் தமிழ்த் தேசியப் பற்றுணர்வைத்தட்டி எழுப்பி, தமிழ் மக்களை ஒன்றுபட்ட தேசிய சக்தியாக உருவாககியது என்பதை இப்பகுதியில் விபரமாக எடுத்துக் கூறப்படுகின்றது.

அமைதி வழிப் போராட்டங்கள் சிங்கள ஆயுதப் படைகளினால் ஒடுக்கப்பட்டதை அடுத்து, மூர்க்கமாக எழுந்த அரச வன்முறைக்கு எதிராக, வன்முறைப் பாதையை நாடவேண்டிய சூழ்நிலைக்கு புரட்சிகரத் தமிழ் இளம் சமூகம் தள்ளப்பட்டது.

1970களின் ஆரம்பத்தில் தீவிரவாத தமிழ் இளைஞரின் அரசியல் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின.

இச் சூழ்நிலையில், தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவாகளால் உருவாக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, ஒரு தலைமறைவு கெரில்லா போராட்டக் குழு என்ற நிலையிலிருந்து, எவ்வாறு தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாகப் படிநிலை வளர்ச்சியை எய்தியது என்பதை இந் நூல் விபரமாக எடுத்து விளக்குகின்றது.

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை அடுத்து, தமிழரின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்ட கொந்தளிப்பான கால கட்டத்தையும், இக்கால விரிப்பில் இந்திய அரசு மேற்கொண்ட அரசியல், இராணுவ, இராஜதந்திர நகர்வுகளையும் இவற்றின் ஒட்டுமொத்த விளைவுகளால் விடு தலைப் புலிகள் இயக்கம் எதிர்கொண்ட சிக்கலான பிரச்சினைகளையும், சவால்களையும் ஒரு நீண்ட அத்தியாயத்தில் அன்ரன் பாலசிங்கம் விபரித்துக் கூறியுள்ளார்.

இந்திய மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த திம்புப் பேச்சுக்கள், பெங்களூர் பேச்சுக்கள் ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் பங்குபற்றல் பற்றியும், 1987ஆம் ஆண்டு ஜூலையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் விடுதலைப புலிகளின நிலைப்பாடு பற்றியும் இப்பகுதியில் ஆழமாக ஆராயப்படுகின்றது.

இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த பேச்சுக்கள் தொடங்கி, நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்ற சமீபத்திய பேச்சுவார்த்தைகள் வரை விடுதலைப் புலிகள் கலந்து கொண்ட சகல சமரச முயற்சிகளும் இந்நூலில் விரிவாகத் தரப்படுகின்றது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் பல உலக நாடுகளின் தலைநகரில் நடைபெற்ற ஆறுகட்ட சுற்றுப் பேச்சுக்களின் விபரங்களையும், அவற்றின் குறை, நிறைகளையும் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அன்ரன் பாலசிங்கம் இந் நூலில் விளக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ, அரசியல் போராட்ட வரலாற்றை தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் அடித்தளமாக சித்தரித்து எழுதப்பட்டுள்ள இப் புதுமையான வரலாற்று ஆய்வு நூலில் இதுவரை வெளிவராத முக்கிய தகவல்களும், கருத்துருவாக்கங்களும் அடங்கியுள்ளன. (ப)

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த 55 எம். பிக்களுக்கு அமைச்சுப் பதவிகள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 55 பாராளுமன்ற உறுப்பினர்கள அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இக்கட்சியைச் சேர்ந்த நால்வருக்கு அண்மையில் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டதுடன் அக்கட்சியைச் சேர்ந்த 58 பாராளுமன்ற உறுப்பினர்களுள் 55பேர் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே இபபொழுது அமைச்சுப்பதவிகள் எதுவும் வழங்கப்படாமல் உள்ளார்கள.

அமைச்சர்களின் எண்ணிக்கையை தேவைக்கதிகமாக அதிகரிப்பது இல்லை என்ற தேர்தல் வாக்குறுதியுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக அமைச்சர்களினதும் பிரதியமைச்சர்களினதும் எண்ணிக்கையை அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் அரசாங்கத்துடன் இணைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் இவ்வாறு அவர்கள் அரசுடன் இணைந்து கொண்டால் அந்தக் கட்சியைச் சேர்ந்த மூவருக்கு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்க உறுதியளித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-121)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உயிரினங்கள் எவ்வளவு தூரம் கீழ் நிலையில் இருக்கின்றனவோ அந்த அளவிற்குப் புலன்களில் இன்பம் காண்பவையாக உள்ளன. மிகக்கீழ் நிலை விலங்கினங்களை எண்ணிப் பாருங்கள். மனிதனை எடுத்துக் கொள்ளுங்கள் அவன் எவ்வளவுக் கெவ்வளவு நாகரிகத்தில் பின் தங்கியவனோ அவ்வளவுக்கவ்வளவு அவனது புலன்கள் அவன் மீது ஆதிக்கம் செலுத் துகின்றன. உயிரினம் உயர் நிலையை அடைய அடைய அவை புலன்களில் இன்பம் காண்பது அரிதாகிறது. புலன் இன்பம் பெரியது தான். ஆனால் அதை விடப் பெரியது அறிவின்பம்.

சுவாமி விவேகானந்தர்

## மாணவர்பேரவையில் நிமலின் நினைவுதினம்

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நாலாம் ஆண்டு நினைவுதினம் இன்று பிற்பகல் 2 மணிக்கு தமிழீழ சர்வதேச மாணவர் பேரவையில் யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-43)

## பாம்பு தீண்டி போராளி மரணம்

(கிளிநொச்சி)

கஞ்சிகுடிசாறுப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி பாம்பு தீண்டிப் போராளி ஒருவர் மரணமடைந்துள்ளார். இரண்டாம் லெப்ரினன்ட் துயலர்சன் (அழகுதுரை ர்சிக்குமார் - மட்டக்களப்பு) என்ற போராளியே மரணமடைந்தவராவார். (க-121)

## துப்பாக்கியுடன் இளைஞர் கைது

மட்டக்களப்பு ஏறாவூர் ரயில் நிலையத்தில் நேற்று முன்தினமிரவு முஸ்லிம் இளைஞரொருவர் ரி-56 ரக துப்பாக்கியுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

ஏ.எம்.மொகமட் பரீட் என்ற இந்த இளைஞர் ஆயுதங்களுடன் பயணம் செய்வதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிசார் இவரை கைதுசெய்துள்ளனர். (ச)

# சோதனைக் காலங்களைக் கூட சாதனைக் காலம் ஆக்கியவர் நாமே

## புலிகளின் மூத்த உறுப்பினர் பாலகுமாரன் உரை




போஎன்றுசொல்லி புலம்பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் நாள் குறிப்பதற்கு முன் வா என்றுசொல்ல எங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கவேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுபபினர் கா.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

பாரிஸ் நகரத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற நினைவெழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயங்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்ததென்றும், அந்த சோதனைக் காலத்தைக்கூட சாதனைக்காலமாக மாற்றியவர்கள் நாங்களே என்றும் தெரிவித்தார்.

எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தை பார்த்து இன்று உலகமே வியந்து நிற்கின்றதென்றும், பேசி வெல்வதற்கும், பேசாமல் வெல்வதற்கும் அவர் தயாராக நிற்பதைப் பார்த்து, என்ன செய்வதென்று தெரியாமல் எதிரிகள் கலங்கிப் போயுள்ளார்கள் என்றும் கூறினார்.

பெருமளவான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆற்றலையும், நுண்மதித் திறனையும் வெளிப்படுத்தும் 'காலத்தை வென்றவன்" என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பனும் உரை நிகழ்த்தினார். (ச)

## வட்டமடுக் காணிப்பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வு காணப்பட்டது

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள வட்டமடு காணி தொடர்பான பிரச்சினைக்கு நேற்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு முன்னிலையில் மாவட்ட அரசாங்க அதிபரினால் கூட்டப்பட்ட விசேட கூட்டத்தில் தற்காலிக தீர்வொன்று காணப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் குயிலின்பன், மாவட்ட நிர்வாகத்துறை பொறுப்பாளர் முரளி, துணைப் பொறுப்பாளர் வினோ ஆகியோரும், முஸ்லிம் விவசாயிகள் தரப்பில் எம்.ஏ.அப்துல்காதர், ஐ.எம்.இப்ராகீம் மற்றும் எம்.அகமது லெப்பை ஆகியோரும் கலந்துகொண்டனர். சிவில் அதிகாரிகளாக அம்பாறை அரசாங்க அதிபர் ஹேரத் அபயவிக்கிரமவுடன் அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேச செயலாளர்களும், மாகாண காணி ஆணையாளர் ஆர்.ரவீந்திரன், காணி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.பரமலிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்த்னர். குறிப்பிட்ட காணி கால்நடை மேய்ச்சல் தரைக்கு 1974 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு பின்பு சில அதிகாரிகளினால் விவசாயச் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்க அதிபர் ஏற்றுக்கொண்டார்.

இதனால் இந்த காணி தொடர்பாக முரண்பாடுகள் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். இன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி தற்காலிகமாக 300 ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கைக்கு அனுமதியளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-8)






## ஐரோப்பிய ஒன்றிய...

புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பேச்சுக்களை நடத்தினர்.

இப் பேச்சுவார்த்தைகளை அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிப் பணிப்பாளர் நாய்கம் ஹேர்வ் ஜுன் பெல்ஜியத் தலைநகர் பிரேசல்ஸில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க பெல்ஜிய அரசு உதவவேண்டும் என்று புலிகளின் தூதுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

இவ்வேண்டுகோளில்,

- எதிர்க்கட்சிகள் வழங்கும் ஆதரவைப் பயன்படுத்தி உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க ஆளும் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும்,
- சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் நம்பிக்கை இழந்துவரும் தமிழ்மக்களுக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கி உற்சாகப் படுத்தவேண்டும் என்றும்,
- இராணுவம் பொதுக் கட்டடங்களிலிருந்து வெளியேறுவதன்மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக ஏற்றுச் செயற்படுத்த இலங்கை இராணுவத்தை தூண்டவேண்டும் என்றும்,
- கிழக்கில் ஆயுதக்குழுக்களுக்கு உதவுவதிலிருந்து விலகுவதன் மூலம் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினது இவ்வேண்டுகோள்களுக்கு செவிசாய்த்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் தாம் எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு தேவை எனக் கேட்டுக்கொண்டனர்.(ம-6)

## மினிவான்....

இச்சம்பவத்தின்போது மோட்டார் சைக்கிளில் சென்ற அரியாலை ஏ.வி வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா கனகரட்ணம் (வயது 54) என்பவரே மரணமானவராவார்.

இவர் யாழ். நகரிலுள்ள புடைவை நிலையம் ஒன்றில் கடமையாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்றதையடுத்து வான் சாரதியும், நடத்துநரும் தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் கூடிய மக்கள் மினிவானின் கண்ணாடியை அடித்து நொருக்கினர். இதேவேளை சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், விசாரணைகளையும் மேற்கொண்டனர். அத்துடன் மினிவானையும் தடுத்து வைத்துள்ளனர். (ச-19,05,43,16,130)

## இந்திய...

கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ் ஒப்பந்தத்தின்கீழ் இரு நாடுகளுக்குமிடையிலான இராணுவப் பயிற்சி, கரையோரப் பாதுகாப்பு வசதிகள், ஆயுதப் பரிமாற்றம் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

## பொலிஸ்மா...

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சந்திரா பெர்னான்டோ பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டு பதவியேற்றபின் நேற்று யாழ்ப்பாணத்திற்கு முதற்தடவையாக விஜயம் செய்திருந்தார்.

காங்கேசன்துறையில் புதிய பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோவுக்கு பொலிஸ் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு உயர் மட்டப் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

யாழ். மாவட்டப் பொலிஸ் நிலையங்களுக்கு விஜயம்செய்த பொலிஸ்மா அதிபர் அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்ற பொலிஸ்மா அதிபர் அங்கு வழிபாடு நடத்திய பின் பலாலி இராணுவத் தளத்திற்குச் சென்று அங்கு குடாநாட்டின் தளபதி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடனான சந்திப்பொன்றை நடத்தினார். (ம-16,19)

## பஸ்நிலையம்...

நடேசனின் படுகொலைச் சம்பவமும், அத்துடன் அங்குள்ள ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் அதனை எடுத்துக் காட்டுகின்றன.

இந்நிலையில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் நினைவு தினமான இன்று நிமலராஜன் கொலைச் சூத்திரதாரிகளை சட்டத்தின்முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குமாறு கோரியும் வட-கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களை கண்டித்தும் அடையாள எதிர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## மிருசுவில்...

தொடர்பாக ஐந்து இராணுவத்தினர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கினை விசாரணை செய்யவென மூவர்கொண்ட நீதிபதிகள் குழு அமைக்கப்பட்டது. எனினும், இவர்களின் ஒரு நீதிபதி பதவி உயர்வு பெற்றதுடன், இன்னொருவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இதன்காரணமாக வழக்கு விசாரணைகள் கடந்த ஒருவருட காலமாக நடைபெறாதிருந்தது. இவ்வழக்கை விசாரணைசெய்ய நீதிபதிகள் குழு அமைக்கப்படவிருப்பதாக பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார். (ச-121)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.